8.87
1917 4

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 DEC 1917
MADRAS

Words of Peace.

Vol. I.] சாந்தி வசனம். [No. 11 & 12.

ஸ்ரீமான். ஜினராஜதாஸர் அவர்களால்

இயற்றப்பட்ட

I PROMISE.

எனது பிரதிக்ஞை

முதற்பாகம்.

Published by
A. RATNASABHAPATHI MUDALIAR, F. T. S.,
Santhi Asramam, T. S. Tirumeyachur,
Peralam Post Tanjore.

May & June, 1917.

திருமீயச்சூர்
பிர்ம்ம வித்தியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

ved.] [விலை அணா 4.

R6
N17
176031

ஜகத்குரு ஸ்தோத்திரம்.

புரவியிலேறிஎன் இன்னூர்காதல் போவதுமெங்கேயோ

என்ற மெட்டு.

தானன தானன தானன தானன தானன தானனு.

நங்குரு நாதனின் நளின மலர்க்கழ நாடிட வருவீரே
நாயக னென்றிரு கழலி நறும்புன லருந்துத நன்றாமே

உலகி லனைவரு மோர்வயிர் வந்தரு ளுத்தமர் தமைபோல
சலமிகு வுலகினி லாகுக வென்றருள் சற்குரு நாயகனே

தந்திர ஞானமு மெந்திர சூன்யமு மிந்தியர் தங்களையே
வந்தடை யாம லருண்மழை தூவிடு மாசறு குருமணியே

வெற்றியை வேண்டிடு மாசர் பெருந்திரள் வீண்சமர் செய்வாரேல்
மற்றவர் வாழ்வுக ளற்றிடு மென்பதை மறப்பது நன்றாமோ

பூவினில் வாசனை பொருந்திய தாமெனப் பொருந்திய சீவனிலே
கோவெனு ஞானக் கொழுந்தை யமைப்பதுங் குருவின் னருளாமே

ஹரிஹரி ஹரிஹரி யென்று தினந்தின மாடித் துதிப்பீரேல்
மறுவறு மென்குரு நாதனு முங்களை வாழ்த்துதல் செய்வாரே.

தாயுமானவர் ஆனந்தக்களிப்பு

ஆதியனாதியுமாகி என்ற மெட்டு.

சங்கர சங்கர சம்பு—சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு

காலத்தின் கொடுமையைப் பாராய்—குருவே
கருணையு மன்புங் கழிவதை நேராய்
இலந்தைக் கனிபோலு மாந்தர்—உள்ளே
இரும்புபோற் கொட்டையா மிதயமும் பாரீர்—சங்கர

பிர்ம கியானிநா னென்பார்—குருவே
பேச்சுக ளெல்லாம் பற்றற்றுச் சொல்வார்
செய்கையி லொன்றுமே இல்லை—சொல்லும்
ஆசாரங் கள்ளமென் றறிவது மில்லை—சங்கர

பணத்தின் பெருமையி னாலே—சிலர்
படுத்தாத பாடெல்லாம் படுத்துறார் பாரில்
ச[illegible]னத்தி லிவர்களுக் குந்தன்—குருவே
கருணையை யீந்து காப்பதுங் கடனே—சங்கர

தன்னைச் சிறந்தவ னாக்கி—யுலகைத்
தன்னுளின் கொடுமையா லழிப்பது நோக்காய்
இன்ன முறைப்ப தொன்றுண்டோ—குருவே
இப்பொழுதே யிடர் களைவதுன் கடனே—சங்கர.

A. S. கோவிந்தராஜையங்கார்.

"எனது பிரதிக்ஞை"

எனுமிவ்வரிய சிறு நூல்.

சீடபாவம்பெற்ற சில சிறுவர்களை நோக்கி,

ஸ்ரீமான். ஜினராஜதாஸர் அவர்களால்

உரைத்தருளப்பெற்ற வசனங்கள்

நிரம்பியது.

Translated by
Messers. K. S. Ramachandra Iyer
Retired Tasildar, Alangudi, and
P. R. Sundara Rajam Iyer, T. S. Worker.

C. Jinarajadasa

எம்மகாபுருடனுக் கியான், மலர்ந்த பார்வைகள், தீரமான மொழிகள், சந்தோஷநிறைந்த நினைவுகள், வீரச்செயல்களிவற்றை முந்நாளில் வாக்குத்தத்தஞ் செய்தேனே அவருக்கே யிவ்வெனது நூலும் அர்ப் பணமாகுக.

அடக்கவட்டவணை.

1. மலர்ந்த பார்வைகள்.
2. தீரமொழிகள்.
3. சந்தோஷநிறைந்த நினைவுகள்.
4. வீரியமுடைய செயல்கள்.
5. முடிவுரை.

கவனியுங்கள்! கவனியுங்கள்!! கவனியுங்கள்!!!

பிர்ம்ம வித்தியா பிரஸ்,

திருமீயச்சூர், பேரளம் போஸ்ட்,

தஞ்சாவூர் ஜில்லா.

இப்பெயர்கொண்ட அச்சாபீசு ஒன்று இவ்விடத்தில் இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் ராஜரீகசம்பந்த மற்ற சகலவிதமான பத்திரிகை, புஸ்தகங்கள், விசித்திரமான கலர்வேலைகள் முதலியன மிகவும் நயமாய் அச்சிட்டுக் கொடுக்கப்படும். சார்ஜுகள் மிகக் குறைந்தனவே. குறிப்பிட்ட காலத்திலும், ஒழுங்காயும் வேலைகள் முடித்துக்கொடுக்கப்படும்.

இவ்வச்சாபீசு இவ்விடம் திருமீயச்சூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கல்விச்சாலையின் தருமத்திற்கெனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாதலின் இதன் வரும்படி முழுமையும் அக்கல்விச்சாலையின் அபிவிர்த்திக்கே உபயோகிக்கப்பட்டு வருகிறது. இதைப் படிக்கும் நந்தேசாபிமானிகள் யாவரும் இவ்வச்சாபீசில் மிகுந்த வாதரவுவைத்து தங்களாலியன்ற வேலைகளைக் கொடுத்து, பிறருக்குஞ்சொல்லி வேலைகளை இங்கனுப்பச்செய்து, இங்கு நடத்தப்பட்டுவரும் கல்விச்சாலையை யபிவிர்த்திசெய்யும் புண்ணியத்தை யடைய முயலுவார்கள்.

பிர்ம்ம வித்தியா பிரெஸ், திருமீயச்சூர்; பேரளம்.

1. மலர்ந்த பார்வைகள்.

ஸ்ரீ குருநாதனிடம் நீவிர் சீடர்களாய் அடிமைபூண்ட சிறுவர்களாதலின் உங்கள் ஒழுக்கம் அக்குரு தேவனது கருத்திற்கு இன்னுமதிகமாய் இணங்கியே நடைபெறுமாறு, அச்சீட பாவமென்பது யாதென்பதை முன்னிலும் விசேஷமாய் உங்கட்கு விரித்துரைப்பேன். உலகிலுள்ள பல்கோடியாம் சிறுவர்களுள் உங்களைமட்டும் குறிப்பிட்டு குருவானவர் ஏற்றுக்கொண்டிருப்பதற்குக் காரணம் யாதென்பதை நீங்கள் உணர்ந்து அறிதல்வேண்டும். குருவும் தனதிஷ்டப்படி எவரையும் தன் சீடனாய் அங்கீகரித்துக்கொள்ளல் முடியாதன்றோ! ஏனெனில் ஜகந்நியதியாம் கருமத்தை மீறுதல் அவருக்கும் அசாத்தியமேயாகும். ஆதலின் அவர் உங்களை அங்கீகரித்திருப்பதற்கு காரணங்கள் யாவையென விளக்குவேன். முதலாவது நீங்கள் யாவரும் பூர்வ ஜன்மங்களில் ஆண் பெண்களில் உத்தமர்களாய்ப் பிறந்து காலங்கழித்து, என்றைக்காயினும் ஜீவன் முக்தரான குரு ஒருவருக்கு சீடராதல் வேண்டுமென அவாக்கொண்டு நின்றமையின், இவ்விதமான சீடர்களாகும் உரிமையை கருமத்தால் நீங்கள் சம்பாதித்துக்கொண்டிருத்தலே என்க. இதுவுமன்றி குருதேவனும் தனது வாழ்க்கையாம் கருணைப்பிரவாஹம் இவ்வுலகிலெங்கும் ஓடிப்பாய்வதற்கு இப்பொழுது உங்களிலொவ்வொருவரையும் தக்க கால்வாயாக்கிக்கொள்ளும் நோக்கங்கொண்டதாலு மென்க. * இனிக் கால்வாயென்பது என்னை? ஓர் நதியினின்றும் ஜலத்தை கிரஹித்துச் செல்லும் சிறு வாய்க்காலேயாகும். ஓர் நதியானது எப்புறத்திலும் செல்லுதற் கியலாதாதலின், அதனின்றும் ஜலத்தை அப்புறப்படுத்தி வேண்டிய ஸ்தலங்களுக்குக் கொண்டு

---

* அன்பருக்கன்பான மெய்யன்—ஐய
னானந்தமோன னருட்குருநாதன்
தன்பாதஞ் சென்னியில்வைத்தான். தாயுமானவர்.

நாட்பட்டகமலமென்ன விதயமேவுநறுந்தேனே. தாயுமானவர்.

போவதற்கென சிறு கால்வாய்களை மானிடர் நிருமித்துக்கொள்ளு கின்றனர். இவ்விதமே ஸ்ரீகுருதேவனது சக்தியும் மேற்கூறிய நதியின் பிரவாஹத்தைப் போன்று அவர் வேண்டுமிடங்கள் யாவற்றிற்கு மோடிப் பரவமுடியாது நிற்கின்றது. ஆதலின் குரு வானவர் உலகில் மானிடர் மத்தியில் எங்கும் செல்லமுடியாதபடி யாலும், அவ்விதமல்லாது சீடராவோர் எவ்விடத்தும் சஞ்சரிக்க முடியுமாதலாலும், குருவுக்குப் பல சீடர்களிருப்பின் அவர்கண் மூலமாய் குருவினது சக்திகள் யாவு மிலகுவாய்ப் பரவிவரலாகு மன்றோ!

இனி நீங்களோவ்வொருவரும் சூரியனது ஒளிக்கு ஜன்ன லெப்படியோ அப்படியே குருதேவனது பிரகாசத்திற்கும் ஏற்ற ஜன்னலாய் நிற்றல்வேண்டும். வெளிச்சமற்றதோர் அறையின் கண் உள்ள ஜனங்கள் ஒருவரையொருவர் அறியாது ஒருவர்மேல் ஒருவர் விழுந்து துன்புறுத்திக்கொள்ள நேருமன்றோ! பின்னை அவ்வறையில் வெளிச்சமிருந்தால் அங்கிருக்கும் ஜனங்களும் ஒருவரையொருவர் பார்த்து ஒருவருக்கொருவர் ஹிம்சையின்றி அன்பொடும் பழகுவார்கள். இவ்விதமே இவ்வுலகிலும் மானிடர் ஒருவரையொருவர் செவ்வனேயறிந்து அன்புடன் நடித்துக்கொள்ளுமாறு பிரகாசிக்கும் ஸ்ரீகுருநாதனது ஞானரூபமாம் சோதிக்குத்தக்க ஜன்னல்களாய் நீங்களும் ஆதல்வேண்டும். * இனி ஜன்னலொன்றின் வழி பிரகாசிப்பது சூரியனது ஒளியேயன்றோ! † அஜ்ஜன்னலின்வழி அஃது தோன்றி சூரியனது பிரகாசமாம் யான்தான் உங்கண்மீதெல்லாம் பிரகாசிக்கிறேன் எனக்கூறுவது போலிருக்கின்றது. அவ்விதமே நீங்களும் பரிசுத்தமடைந்து

---

* ஏதுந்தெரியா தெனைமறைத்த வல்லிருளை
நாதநீக்கவொரு ஞானவிளக்கில்லையோ?
நின்னருள்கொண் டறிவதல்லா னெறிவேறுண்டோ?
என்ஞானநாயகனே நின்மோனஞான
நாட்டமுற்றுவாழ்ந் திருக்குநாளெந்நாளோ?

† அருளாலெவையும் பாரென்றான்—அத்தை
யறியாதேசுட்டியென் னறிவாலேபார்த்தேன்
இருளானபொருள் கண்டதல்லால்—கண்ட
வென்னையுங்கண்டில னென்னேடிதோழி! தாயுமானவர்.

குருதேவனுக்கு யதார்த்தமான சீடர்களாய் நிற்பீராயின் குருதேவனது சோதியும் உங்கண்மூலமாய் வெளியுலகமெல்லாம் பிரகாசிக்குமென்பதற்குத் தடையுமுண்டோ? * இனிக் குருதேவனும் தன் சீடர்களின் மூலமாய் உலகின்மீது தனது கருணைப்பிரகாசத்தை எண்ணிறந்த விதங்களிற் பொழிந்து வருகிறார். அவற்றுள் யானிங்கு நான்கு வழிகளைப் பற்றிமட்டும் கூறுவேன். அவையாவன:—நுங்கள் முகங்கள் அல்லது பார்வைகள், மொழிகள், கருத்துக்கள், செயல்களாகிய இந்நான்கேயாகும். † இஃதொவ்வொன்றும் உண்மையில் நுங்களிடமுள்ள ஒவ்வொரு ஜன்

---

* இன்பம்பெருக்கி யிருளகற்றியெஞ்ஞான்றுந்
துன்பந்தொடர்வறுத்துச் சோதியா—யன்பமைத்து

மூலவிருள்கால்வாங்க மூதறிவுதோன்ற—வருட்
கோலம்வெளியாகவெந்தை கூடுவித்தலாகாதோ? தாயுமானவர்.

தேசோமயந்தந்தினியொருகாற்
சித்தத்திருளுந்தீர்ப்பாயோ! தாயுமானவர்.
போதமென்பதேவிளக்கோர்வ்வு மவித்தைபொய்யிருளாந்
தீதிலாவிளக்கெடுத்திருட்டேடவுஞ் சிக்காதாதலாலறிவாய்
நின்றவிடத்தறியாமை யேதுமில்லையென்றெம்பிரான்
சுருதியேயியம்பும். தாயுமானவர்.

† வைத்தபொருளுடலாவி மூன்றுநின்கை
வசமெனவேயான்கொடுக்க வாங்கிக்கொண்டு
சித்தமிசைப்புகுந்ததுதான் மெய்யோபொய்யோ
சிறியேற்கிங்குளவுரையாய் திகையாவண்ணம்
விளங்கவெனக்குள்ளுள்ளே விளங்காநின்ற
வேதகமேபோதகமே விமலவாழ்வே
களங்கரகிதப்பொருளே! தாயுமானவர்.

நீயேயிங்கெளியேற்கு தாகமோக
நினைவூடேநின்றுணர்த்தி நிகழ்த்தலாலே
பேயேற்குந்தனக்கெனவோ ரன்புமுண்டோ
பெம்மானேயின்னமன்பு பெருகப்பாராய்!
அடியார்நினைவினிடை யாறுய்ப்பெருகும்
பெருங்கருணையரசே யென்னையாள்வானே! தாயுமானவர்.

எத்தனுகிவந்தில் புகுந்தெமையாளுங்
கொண்டெம் பணிகொள்வான்
வைத்தமாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னிமன்னத்திகழுமே! திருவாசகம்.

னலே போன்று நிற்கின்றது. ஒரு ஜன்னல் அசுத்தமற்று நிற்கின் அதன்மூலமாய் உட்புகும்பிரகாசமும் சூரியனது யதார்த்தமான சோதியேயாகும். அவ்வாறே நுங்கள் பார்வை, மொழி, கருத்துச் செயற்களாகும் ஜன்னல்களும் தூய்மைபொருந்தி விளங்குமாயின், அவைகள் மூலம் ஸ்ரீகுருநாதரே பிரதிநிமிஷமும் யதார்த்தமாய்ப் பிரகாசிப்பரென்பது உண்மையே யாகுமன்றோ! *

இனி ஸ்ரீகுருதேவர் ஜீவித்திருப்பதெல்லாம் உலகினரை உய்விக்கும் ஓரேநோக்கங் கொண்டேயன்றி வேறன்றென்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். இவ்வுலகில் துன்பமும் துக்கமும் மிகுதியுண்டென்பதை நீங்கள் சிறுவர்களாயினும் நன்கு அறி

சோதியாயிருட்பிழம்பைச் சூறையாடுந்
தூவெளியேயெனைத்தொடர்ந்து தொடர்ந்தெந்நாளும்
வாதியாநின்றவினைப் பகையைவென்றவாழ்வே
யிங்குனைப்பிரிந்து மயங்குகின்றேன். தாயுமானவர்.

* மயக்குறுமென்மனமணுகாப் பாதைகாட்டி
வல்வினையைப்பறித்தனையே வாழ்வேநானென்
செயக்கடவேன் என்செயலெலாநினதேயென்று
செங்கைகுவிப்பேனல்லாற் செயல்வேறில்லை.

எத்திக்குந்தானுகி யென்னிதயத்தேயூறித்
தித்திக்குமானந்தத் தேனேபராபரமே!

திக்கொடுகீழ்மேலுந் திருவருளாம்பொற்பறிந்தோர்
கைக்குள்வளர்நெல்லிக் கனியேபராபரமே!

ஆனந்தமோனகுரு வாமெனவேயென்னறிவின்
மோனந்தனக்கிசைய முற்றியதாற்றேனுந்து
சொல்லெல்லாமோனந் தொழிலாதியுமோன
மெல்லாநன்மோனவடிவே! தாயுமானவர்.

பொய்ப்பணிவேண்டேனைப் பொருட்படுத்தியண்ணலென்பான்
மெய்ப்பணியுந்தந்தொருகான் மேவுவனோபைங்கிளியே?

என்னதியானென்பதற வெவ்விடமுமென்னுசான்
சந்நிதியாக்கண்டுநிட்டை சாதிப்பதெந்நாளோ? தாயுமானவர்

சித்தமும்வாக்குந் தேகமுநினவேசெ..................
வைத்திட்டிங்கென்னை நின்னடிக்குடியா
மறைமுடியிருந்த வான்பொருளே!

வீர்கள். சகல மன்பதைகளின் துன்பமூட்டைகளைச் சிறிது சிறிதாகவாயினும் குறைத்துவர வேண்டுமென்பதுவே குருதேவரது கருத்தாகும். இஃதொன்றே அவர் மனதிற் குடிகொண்ட பேராசையாகின்றது.* இனி நீங்களும் அக்குருதேவர்க்குச் சீடர்களாதலின் அவர்மாட்டு நீங்கள் புரியவேண்டும் கடமையுமொன்றுண்டு. அதாவது அவரது பெருந்தொழிலில் அவர்க்கு நீங்கள் உதவிபுரிதலே யென்க. இனி குருதேவனும் மகாபுருடனுக்கு மிகச்சிறியோராகிய நீங்கள் எவ்வகை உதவியைப்புரிதல் கூடுமென வினவுவீர்கள். ஓர் முறையில் நீவிர் யாவரும் வாலிபப்பருவத்தினரேயாயினும் மற்றோர் திருஷ்டியில் நீங்கள் அனைவரும்

என்னுடையுயிரே யென்னுளத்தறிவே
யென்னுடையன்பெனு நெறியாய்க்—
கன்னன்முக்கனிதேன் கண்டமிர்தென்னக்
கலந்தெனை மேவிடக்கருணை—
மன்னியுவுறவே, யுன்னை நான்பிரியா
வண்ணமென்மனமெனுங்கருவி
தன்னதுவழியற் றென்னுழைக்கிடப்பத்
தண்ணருள் வரமதுவேண்டும் — தாயுமானவர்.

ஊனாகநிற்குமுணர்வை மறந்தையாநீ
தானாகநிற்கவொரு தந்திரந்தானில்லையோ?
எல்லாருமின்புற் றிருக்கநினைப்பதுவே
யல்லாமல்வேறொன் றறியேன்பராபரமே.

* எவ்வுயிருந்தன்னுயிர்போ லெண்ணுந்தபோதனர்கள்
செவ்வுயிரைநாடிமிகச் சிந்தைவைப்பதெந்நாளோ?

விண்கருணைபூத்ததென மேவியுயிர்க்குயிராய்த்
தண்கருணைதோன்றவருள் தாய்நீபராபரமே!

இன்பமயமாயுலக மெல்லாம்பிழைப்ப
தற்குன்னன்பு நிலையென்பார்!

திருவருண்ஞானஞ் சிறந்தருள்கொழிக்குங்
குருவடிவான குறைவிலாநிறைவே
குன்றாப்பொருளே குணப்பெருங்கடலே
சீர்மலிதெய்வத் திருவருளதனாற்
பார்முதலண்டப் பரப்பெலாநிறுவி
இமைப்பொழுதேனுந் தமக்கெனவறிவிலா
எழையுயிர்த்திரள் வாழவமைத்தனை! — தாயுமானவர்.

ஆன்மாக்களேயன்றிச் சிறுவர்களாதல் எங்ஙனம்? உலகபரிபாக மார்க்கத்தில் இச்சமயத்தில் நீங்கள் சிறுவர்களின் சரீரங்களில் பிறப்படைந்திருப்பினும், குருநாதன் தனக்குச் சீடர்களாய் ஆட்கொண்டிருப்பது உங்களுடைய யதார்த்த ஸ்வரூபங்களாம் ஆன்மாக்களையேயன்றி உங்கள் சரீரங்களையே யல்லவன்றோ! ஆதலின் நீங்கள் யாவரும் ஆன்மாக்களே எனும் உண்மையை எப்பொழுதும் மறவாதிருத்தல்வேண்டும்.

இனி இத்தகைய குருமூர்த்தியினது சேவைக்குரிய விசேட குணம் ஒவ்வொன்று நம்மொவ்வொருவரிடத்திலும் இருக்கின்றது. நம்முள் ஒருவரிடம் மிகவதிகமான வீர்யம் அல்லது பலம் காணப்படுகின்றது. இன்னுமொருவரிடத்து மிகுதியான அன்பும், மற்றுமொருவரிடத்தில் சந்தோஷ நிறைவும், விசேடமாய் விளங்கிநிற்கின்றது. இவையத்தனையும் ஸ்ரீ குருநாதனிடமுள்ள

சகமெலாம்பெற நல்லருளுதரமாச்சமைந்தோய். தாயுமானவா

விரியுநல்லன்பு விளைத்திடும்விளைவு,
தன்னுயிர்போலத் தரணியின்மருவிய
மன்னுயிரனைத்தையும் வளர்த்திடும்வேந்தன்,
தான்பெறும்பேறு சகமெலாம்பெறவே
வான்பெருங்கருணை வளங்கியமாரி,
மண்டலமூன்றிலு மன்னியவுருவிலுங்
கண்டவையத்திலுங் கடவுளாய்நின்றோன்.

நேசயோகத்துறு நிருபரெல்லாந்தொழு
மிராஜயோகத்திரை..........................
பொறுமை,தெளிவு புனிதவாசார
மறுவிலாவண்மை வாரமியற்கை
தண்ணமர்சாந்தந் தயங்கியகீர்த்தி
யெண்ணெண்கலைபயி லிணையிலாக்கல்வி
நல்லவிரக்க நடுநிலைசத்திய
மில்லையென்னும லெவர்க்குந்தருங்கொடை
நற்குணமெல்லா நண்ணியபெருந்தகை.

குணங்களேயாதலின், நீங்கள் ஒவ்வொருவரும் தத்தம் விசேஷ குணத்தையே மாசு சிறிதுமில்லாத் தூய்மை விளங்கச்செய்து கொள்வீராயின், உங்களுடைய வீர்யம், அன்பு, சந்தோஷங்கள் மூலமாய் குருநாதரே தன்னைப் பிரகாசித்துக்கொள்ளுவர். ஆனால் இவ்விதமாக்கிக்கொள்ளற்கு வழியாதெனில், குருதேவனிடம் இக்குணங்கள் எப்படி விளங்குகின்றனவோ அவ்விதமே நும்மிடத்தும் அவை பிரகாசிக்குமாறு செய்துகொள்ளல்வேண்டும். * அஃது எவ்விதமெனில் விளக்கிக்கூறுவேன். இவற்றுள் வீரியமெனும் குணத்தை முதலில் விரிப்பேன். குருநாதன் தன்னிடம் நிறைந்துநிற்கும் வீரியத்தை நோக்கிப் பெருமைகொள்ளுகிறதில்லை. பின்னைக் கடவுளது இயற்கையான வீரியமாங்குணத்தை ஒவ்வொரு ஜீவனும் தன்னிடம் உணர்ந்து அறிந்து கொள்ளும்படி செய்வதற்கே † குருநாதனும் அக்குணத்தைத் தன்னிடம் போற்றி வளர்க்கிறார். அவ்விதமே அன்பும் குருதேவனது உள்ளத்தில் நிறைந்து நிற்கின்றது. தான் ஆனந்தமடைவதற்கெனவாவது, அல்லது பிறரைத் தன்னிடம் அன்புகொளச் செய்வதற்கெனவாவது அல்லாமல், குருதேவன் பிறர் யாவரும் தத்தம் நண்பர்களை நோக்கியும் பகைவர்களை நோக்கியும் அன்பேகொள்ளும்வண்ணம் செய்து வருவதற்கெனவே, இவ்வன்பாம் குணத்தைத் தன்னிடம் போற்றி வளர்க்கின்றனர். இவ்வாறே அவரிடமுள்ள சந்தோஷமெனுங்குணமும் அன்னியர் தன்னைநோக்கி அன்பும் மரியாதையும் பாராட்டிவருவதால் ஏற்படுவதன்று; பின்னை கடவுளின் சிருஷ்டியாம் இவ்வுலகவாழ்வை குருநாதன் தனது பேரறிவுடை திருஷ்டிகொண்டு நோக்கி, உண்மையில் அஃது மிகவும் உசிதமானதும் ஆனந்த நிறைந்ததுமாமென அறிந்து கொள்வதால், அக்குணம் ஏற்படுகின்றது; ஆதலினவ்விதமே நீங்களும் அக்குணத்தைக் காட்டி வரல்வேண்டும்.

---

* அந்நிலைபதிந்த நின்பழவடியர்தஞ்
சீராயிருக்க நினதருள்வேண்டுமையனே! — தாயுமானவர்.

† அன்னைபோலவருண்மிகுத்து மன்னுஞானவரதனே
என்னையேயெனக்களித்த நின்னையேநானுநினைவனே!
தாயுமானவர்.

ஏனெனில் குருதேவனும் தனது சீடர்களிடம் தன்னையே கொடுத்துக் காட்டி, அவர்கள் ஒவ்வொருவரையும் தனது பிரகாசம் விளங்குவதர்க்கேற்ற ஒவ்வொரு கண்ணாடியாக நிருமித்து விடவு மிச்சிக்கின்றனரன்றோ!

குருதேவனுக் குகந்த உண்மைச் சீடர்களாதலை நீங்கள் விரும்புவீர்களாயின் மேற்சொன்னவைபோன்ற பல நற்குணங்களையெல்லாம் நீவிர் சம்பாதித்துக் கொள்ளல்வேண்டும். அவற்றுள்ளெல்லாம் இப்பொழுது நீங்கள் சாதனம்செய்துகொள்ளும் வண்ணம் நான்கு குணங்களை இங்கு எடுத்துரைக்கத் துணிவேன். அவற்றுள் முதலாவது 'முகமலர்ச்சி'யென்பதாகும், இரண்டாவது தீர்மான வசனங்கள், மூன்ருவது சந்தோஷமான நினைவுகள், நான்காவது உதாரமான செயல்கள் ஆகிய இவைகளேயென்க.

இந்நான்கனுள்ளும் முதலாவதான 'முகமலர்ச்சி'யென்னும் குணத்தை இன்று விளக்குவேன். குருதேவனது திருஷ்டி செல்வதர்க்கேற்ற ஜன்னல்களாய் நீங்கள் ஆகிவிடவேண்டுமென யான் முன்னமே கூறினேனன்றோ! ஏனெனில் குருதேவரும் கடவுளின் பிரகாசத்திற் கேற்றதோர் ஜன்னலேயாகி நிற்பவரன்றோ! கடவுளது நினைவே குருதேவனது சிந்தையிற்றங்கும் நினைவாகின்றது. அவ்விதமே கடவுளது ஆசைகளையே குருதேவர் மானிடர் விஷயத்தில் பாராட்டுகின்றனர். இனி கடவுளும், சந்தோஷமும் வீரியமும் அன்பும் நிறைந்த பூரணமேயாதலின், அவனது சாயையேயாகும் குருதேவனும் இவற்றையெல்லாம் பெற்றவவரேயாகி, பிரபஞ்சத்தின் க்ஷேமத்திற்கு ஓர் திவலையேனும் மோசமென்பது வாராதென்பதை நன்குணர்ந்து, சதாகாலமும் தானும் அவ்விதமே ஆனந்தம் நிறைந்துவிளங்குவர். இனி உலகில் எப்புறத்திலும் துக்கமும் துன்பமுமே செறிந்துநிற்க, அவற்றை குருநாதரறியாது ஆனந்தமயமாய் நிற்றல் எங்ஙனமாகுமென நீங்கள் வினவுவீர்கள். மானிடரைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான தெளிவுடன் குருநாதர் இவை யாவற்றையும் அறிந்துகொண்டவரேயாயினும் மேற்கூறியபடி தனதானந்தானுபவத்தில் ஒரு சிறிதும் குறையாமல் வாழ்பவரேயாவர். இவ்வுலகமுழுவதும் துக்கத்துள்

ஆழ்ந்து நிற்பதைச் செவ்வனேயறிந்தும் குருதேவன் சந்தோஷம் நிறைந்துநிற்பது எங்ஙனமெனும் இவ்விரகஸ்யத்தை அறிந்து கொள்ளற்கு தற்காலம் நீங்கள் திறமையுள்ளவர்களல்லீர். இனி வருங்காலத்தில் கருமமெனும் ஜகத்தின் நியதியையும், கடவுளால் வகுக்கப்பட்டிருக்கும் இஜ்ஜகத்தின் பரிபாக மார்க்கத்தையும், நீவிர் அறிந்துகொள்ளுங்காலே, உலகின் துன்பத்தை உணரும் பொழுதும் கருணைநிரம்பிய குருதேவன் போல்வாருக்குத் தம் ஆனந்தம் குன்றுமலே நிற்பதும் சாத்தியமாகுமென்பது உங்களுக்கு விசதமாகும். ஆதலினிப்பொழுது அத்தகைய பெரும் ரகசியத்தையறிய முயலாமல், கேவலம் குருதேவன் நடக்கும் வழியையே பற்றி நீங்களும் நடக்கப் பழகிவருதலே உங்கள் கடமையாகுமன்றோ!

ஆகவே மூதறிவுடையோனும் குருநாதன் எப்பொழுதும் இன்பமுமானந்தமும் நிறைந்தவராய் விளங்குவதுபோல, நீங்களும் சதாகாலமும் மலர்ந்த பார்வைகளும் குளிர்ந்த மனமும் உடையீராய் நிற்றல்வேண்டும். இனி எப்பொழுதும் இவ்விதமிருத்தற்கு இயலவில்லையே, என்செய்வது என நீங்கள் மயங்கலாம். அனேக சமயங்களில் நாம் இவ்விதம் கவலையற்றுச் சந்தோஷமுற்றவர்களாய் நிற்றற்கு முடியாமற்போவதும் சத்தியமே. ஆதலாற்றான் உங்கள் பழக்கத்தை மாற்றிக்கொள்ளவேண்டியது அவசியமென்பதைப் பற்றி யானுமிப்பொழுது இயம்பலுற்றேன். மனது கலங்கும்பொழுது என்னசெய்யவேண்டுமென்பதை முதலில் யோசிப்போம். நமக்கு ஏனிவ்விதக் கலக்கம் வந்ததென்பதை அப்போதைக்கப்போது ஊகித்தாலோசிக்கத் துடங்கல் நமது முதற்கடமையாகும். இவ்விதம் சிந்திக்கின் அதற்குக் காரணங்கள் இருவகையாகுமென நமக்குத் தெள்ளிதின் புலப்படும். முதலாவது உங்கள் ஸ்தூலசரீரங்களை பாதிக்கும் வியாதிமுதலிய வேதுக்களேயென்க. இரண்டாவது முதலில் நும்மனங்களைச் சம்பந்தித்துப் பின்னரவற்றின் மூலமாய் நுங்காமிக வியற்கையையும் பாதிக்கும் காரணங்களேயாகும். இவற்றுள் நுங்கலக்கத்திற் காதாரமான ஸ்தூலவேதுக்களைப் பற்றி முதலிற் பேசுவேன். சாதாரணமாய் வியாதியை உற்பத்திபண்

னும் நுண்ணிய அணுக்கள் முதலிய விஷாம்சங்கள் நமது ஸ்தூல சரீரத்துள் நுழைந்து அதற்கு அசௌகரியத்தை உண்டுபண்ணி விடுவதாலேயே நமது சூக்ஷுமமானச சரீரங்களும் உடனே அசௌக்கியமடைந்து, முடிவில் நமது இச்சை நினைவுகளும் கலங்கி துன்பம் விளைகின்றது. ஆனால் துன்பமல்லது துக்கமென் பது நமது சரீரங்களின் தன்மையேதவிர நமது ஆன்மாக்களுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமுடையது ஆகுமோ? ஆயினும் ஆன்மா வும் சரீரமும் சேர்ந்திருக்குமுண்மையால், சரீரத்தை எது பாதி க்குமோ அதுவே ஆன்மாவையும் பீடிக்கின்றது; அதாவது ஆன்ம வியற்கையான பாவனையை அசுத்தப்படுத்திக் களங்கமாக்கிவிடு கின்றதென்க. ஆதலின் எப்பொழுதாயினும் உங்கட்கு சௌகரி யக் குறைவின் உணர்ச்சி ஏற்படின், உடனே அக்குறைவுகளை நீக்கிக்கொள்ள முயலாது, இத்துன்பத்தை யாம் தாங்கவேவேண் டுமென நினைத்தல் கூடாது. ஏனெனில் இவ்வல்லலைத் தாங்க முயலுதல் நமது சக்திகளை வீணே செலவழித்தலேயாகும். பின்னை யதன் காரணமின்னதென வோர்ந்து அஃதை நிவிர்த்தித்துக் கொள்ளலே உங்கள் கடமை. உங்களது சகல சக்தி உற்சாகத் தையும் வீணாக்காது குருநாதனது தொழிலைப் புரிதற்கெனச் சேகரித்துக் காத்துக்கொள்வதே மேன்மை. துன்பத்தை சகிப்ப தால் நுங்கண் மனோவலிமையைப் பாழாக்குவது எவ்வாற்றானும் பொருந்தாது. அவ்விதம் துன்பத்தைச் சகிப்பது உங்களால் இய லாதென யான் சொல்லவில்லை. ஆனால் அவ்விதம் செய்வீர்களா யின் பிரதிநிமிஷமும் குருவினது பணிகளை நிறைவேற்றும் ஒரே நோக்கத்தால் நிறப்பிக்கொள்ளவேண்டிய நுங்கள் மனதை, சதா காலமும் துன்பவாசனையின் உணர்ச்சிகொண்டே நிறப்பிக்கொள் வீராவீர். ஆகவே ஏதேனும் உங்கள் தேகங்களில் அசௌக் யம் நேரிடின் உடனே அதற்குக் காரணத்தைக் கண்ணுற்று அஃதை விலக்கிக்கொள்வதே குருதேவனது சேவையைப் புரிய நோக்கங்கொண்டோர் யாவரும் கொள்ளுங் கடமையாகும்.

ஆனால் இவ்வித மனோநிக்கிரகத்தைச் சாதித்துக்கொள் ளற்கு நுங்கட்குச் சிறிதுகாலமும் பழக்கமுஞ் செல்லும். ஆத லின் இவ்வாரம்பத்தில் நுங்கட்குத் துன்பம் நேரும்பொழுதெல்

லாம், அவ்விதம் துன்பமடைவது சரீரமேதவிர ஆன்மாவன்றென்பதை மறவாதிருத்தல் வேண்டும். இக்கருத்தையே மனத்திலுன்னி, ஆன்மாவை சரீரபாவனையிற் செல்லாவாறு தடுத்துக்கொண்டு, நீங்கள் யாவரும் நும்மாற்கூடியவரை ஆன்மாக்களாய்த் தனித்துநிற்க முயன்றுவரல்வேண்டும். *

இனியுங்களது சாந்தி சந்தோஷம் இவைகுறைதற்கு இரண்டாவதான காரணத்தை யுற்று நோக்குவாம். இவை மனோமயமானவை. சில சமயங்களில் நுங்களொடு பழகுவோர் நுங்கண்மீது அன்பின்றி ஒழுகுதலால் உங்களுக்குத் துன்பமும் விசனமும் உண்டாகின்றது. இவர்களிவ்வித மிருத்தற்குக் காரணம் யாதோவென்பதை ஆராய்வோம். அனேகமாய் பூர்வஜன்மங்களில் நீங்கள் இவர்களை அவ்விதம் துன்புறுத்தி யிருப்பதாற்றான் நுங்களுக் கிஜ்ஜன்மத்தில் அவர்களோடும் கருமசம்பந்தமேற்பட்டு அவர்களால் இடுக்கணும் நேருகின்றது. ஆதலினிஃது நீங்கள் அனுபவித்துத் தீர்க்கவேண்டியவற்றுளொன்றே யாதலால், அவர்களிடமிருந்து வரும் துன்பத்தை நீங்கள் சகித்துக்கொள்ளலே வேண்டும். இதனுல் நீங்கள் செலுத்தவேண்டிய கருமக்கடன் சுமையும் ஒழிந்துவிடுகின்றது. இஃதன்றியும் சிற்சில வேளைகளில் நுங்கட்குத் துன்பம்செய்வோர் தாங்களே மனச்சஞ்சலமுங் குழப்பமு முடையோராயிருப்பதால், தாமடையுமவ்வல்லலை தாங்களறியாமலே சிறிது நுங்கண்மீது சுமத்திவிட எத்தனிக்கிறுர்கள். மானிடருட் சாமானியர் பலர் தங்கண்மீதுள்ள பாரத்தை ஒருவாறு அகற்றிக்கொண்டு சமீபத்திலிருக்குமயலாரிட மஃதைச் சிறிது எறிந்துவிட முயன்றுவரும் பழக்கமே இதுவாகும். இத்தகையினர் தமது சுமைகளை அன்னியரின்மீது மேற்கூறிய வண்ணம் சுமத்திவிடுவதால், தஞ்சுமைகளின் பளுவுஞ்

---

* ஊனுகநிற்கு முணர்வைமறந்தையாநீ
தானுகநிற்கவொரு தந்திரந்தானில்லையோ?

பின்னுமுடற்சுமையாப் பேசும்வழக்கதனை
லென்னபல்னுமுற் றிருந்தோமே—அன்னதனை
லாநந்தந்தானேதா னுகுமெம்மையனே
யேனிந்தத்துன்ப மினி.

தாயுமானவர்.

176031

சிறிது குறையுமௌ நம்புகிறுர்கள். இவர்கள்மீது நீவிர் இரக்க முறுதலே வேண்டும். நல்வழியிற் பழக்கமற்ற சிறியோர் சிலர் நுங்களிடம் குற்றஞ்செய்யின் அவர்கண்மீது கோபம்செய்யாமை எப்படி அழகாமோ அவ்விதமே இவ்வியற்கையினேரையும் நீவிர் இரக்கத்துடன் பாவித்தல்வேண்டும்.

இனியுங்கட்குத் துன்பநேருதற்குள்ள மற்றுமோர்வழியா தெனில்: அன்னியரிற் சிலர்மீது நீர் அன்புசெலுத்தும்பொழுது அவ்விதம் அவர் நும்மீது அன்புடன் நடவாதிருத்தலே யென்க. நாமொருவரை நேசிக்கும்பொழுது அவரும் நம்மை நேசித்தால் அஃது நமக்கெப்பொழுது மின்பத்தை விளைவிக்குமாதலின், அவ் விதம் நமது அன்பிற்கு விஷயமாவோர் நம்மீதும் அன்புசெலுத் திஞலன்றி நமக்குத் துன்பம் தோன்றுவது சகஜமேயாகும். ஆயி னும் எப்பொழுதாவது பிறரிடமிருந்து உங்களுக்குத் துன்பந் தோன்றுமாயின், அதற்குக் காரணம் கடவுளின் ஆனந்தம் உங் கள் நெஞ்சிற் ரேன்றுமாறு* தவிய ஜன்னலொன்று இத்தருணம் அடைபட்டோ, அல்லது மங்கலாகியோ நிற்கின்றதென்பதைத் தவிற வேறில்லையெனும் உண்மையை நீங்கள் உணர்ந்தறிந்து கொள்ளல்வேண்டும். இத்தன்மையதான துன்பத்தின் எதுக்கள் யாவும் உங்கள் உள்ளுறையினின்றும் கிளம்புவனவேயன்றி, வெளி யுலகத்தைச் சேர்ந்தன வாகாவென்பதே உண்மை. ஓர் ஜன்ன லின்கண் கருமையுடைய தடையொன்று தங்கும்படி விடுவோ மாயின், அஃது வெளிச்சத்தைப் பூரணமாய் பிரகாசிக்கவொட் டாமற்றடுக்கும் நிழலொன்றை வீசுமன்றே! இத்தன்மையைப் போல் நம்மிடமிருக்கு மேதோவொரு மலரூபமான அம்சமே இவ்வகையான துன்பமாம் திரையொன்றை நம்மிடம் நாட்டுகின் றது. ஆதலின் அதை நீக்கிக்கொண்டு நாம்மட்டும் ஒருவரை உண்மையுடன், அவரும் நம்மை நேசிக்கவேண்டுமெனும் கைம் மாறை எதிர்பாராமலே, சுவயநலமின்றி, அவர் பொருட்டுதவும் நோக்கங்கொண்டே, நேசிப்போமாயின் அவ்விதமே அவரது உத் தம மனது நம்மையும் திரும்பி நேசிக்குமென்பதற்கு ஐயமே

* ஆராவமுதனைய வானந்தவாரியென்பாற்
றூராமலேயாநீ தள்ளிவிடவந்ததென்னே? தாயுமானவர்.

யில்லை. அவரவ்விதம் நம்மிடம் அன்புசெலுத்தாமல் இருக்கவே முடியாது; ஏனெனில் அவரது ஆன்மாவின் இருப்பிடமான உத்தமமனதானது, அவ்விதம் தனக்குக் கிடைக்கும் அன்பு, உபகாரம் இவற்றைப் பெற்றுக்கொண்டு அவற்றிற்கு நன்றிபாராட்டாமலேயிருத்தல் ஒருபோது மமையாது. பின்னைத் தன் உயர்சுவபாவத்திற்றங்கி நிற்கும் இவ்வெண்ணத்தை அவர் தானே வெளியிற் காட்டுவதற் கியலாவண்ணம் பலதடைகள் நேரிட்டிருக்கின்றனவேயன்றி வேறன்று. ஆதலின் நீங்கள்மட்டும் உண்மையான அன்பை அவரிடம் செலுத்துவீர்களாயின், அவர் வெளியுலகில் உங்கள்மீது காட்டும் அசிரத்தையை நீங்கள் லக்ஷியம் செய்ய வேண்டிய தவசியமில்லை. ஏனெனில் அவரது ஆன்மாவாகும் அந்தரங்கநிலை உள்ளபடியே உங்களது உபகாரத்திற் கிணங்கி, அன்பையு நன்றியறிதலையுங் கொண்டதுவாகி,உங்கண்மீது அவற்றைக் காட்டியே நிற்கின்றதென்பதற் கையமில்லையென நீவிர் உணர்ந்தறிதல் வேண்டும். மாயையாகும் அந்தகாரம் நிறைந்த இப்பூவுலகில் நீங்கள் அன்புசெலுத்தியும் அவ்வன்பைத் திருப்பிக் காட்டாத மாந்தர் பலரிருப்பினும், அஃதை நீங்கள் மனத்திற் கொள்ளல் அழகாமோ? ஏனெனில் நீங்கள் பிரீதியைச் செலுத்துவது ஆன்மாக்களின் மீதேயன்றி, அவற்றின் கோசங்களாய சரீரங்களை நோக்கியன்றென்பதை நீங்கள் மறத்தல் கூடாது. அவ்விதம் பிறர் நமக்களிக்கும் அன்பை எதிர்பாராமலே, நாம் பலாபேக்ஷையற்றதோர் அன்பை அவர்மீது செலுத்தும் பாக்கியம் நமக்குக் கிட்டியதென நீவிர் எண்ணலே மேன்மையாகும்.

இனிச் சில சமயங்களில் சிறுவர்கள் தாங்கள் ஒருவரிடத்தில் மதிப்பைப் பாராட்டும்பொழுது, அவர் அச்சிறுவர்களை லக்ஷியம் செய்யாதுவிட்டு வேறு சிலரை கவனிப்பாராயின், முற்கூறிய சிறுவர்க்கு வருத்தமுண்டாவதைக் காண்கிறோம். இங்குதாம் உபேக்ஷையை யடைந்தோமென இவ்விதம் வருத்தத்தை உணர்வோர்க்கு, மற்றவர்கள்மீது பொறாமையும் சிறிதுண்டாகின்றது. இஃது சாமானியரிடம் தோன்றுவது சகஜமேயாயினும், நீங்கள் யாவரும் முக்தனும் குருதேவனது சீடர்களாதலின், உங்களிடம் அமைதல் பொருந்தாது. எவராவது மற்றொருவரிடம் அன்பு

செலுத்தினுல் நீங்களஃதைக் கண்ணுற்று ஆனந்தித்தலே வேண்டும். இவ்வன்பிற்கு நீங்கள் இத்தருணம் பாத்திரங்களாகாது நிற்பினும், அதற்காக நீங்கள் மனங்கோணுதல் அல்லது பொருமை, விசாரம் இவற்றைக்கொள்ளல் எவ்வாற்ருனும் அழகாகாது. பின்னே உலகினில் இத்தருணம் அன்பின் அளவு கடுகளவாயினும் அதிகமாயிற்றேயென வியந்து மகிழ்தலேவேண்டும்.

பாடசாலே, உயர்தரகல்லூரி முதலியவற்றுள், பலகாலம் கல்வியைப் பயிலவிருக்கும் சிறுவர்களாம் நுங்கட்கு, துன்பமுண்டாவதற்கு மற்றுமோர் ஏதுவுமுண்டு. அஃதியாதெனில், நீங்கள் பயின்றுவரும் கல்வியின் பரீக்ஷையொன்றில் ஒருசமயத்தில் நீங்கள் தேர்ச்சியடையாமற் போனுலும், அல்லது ஆசைவைத்த விளையாட்டில் நீங்கள் சேர்ந்துகொண்ட கக்ஷிக்கு ஜயமுண்டாகாதுபோயினும், உங்கட்குக் கவலே ஜனித்தலே யென்க. இவ்விதமே கல்விச்சாலேயில் வாழும்பொழுதும் அதைவிட்டு வெளியேறிய பின்னரும் சின்னுள்வரை நுங்கட்கு மனத்துயரை உண்டாக்கும் வழிகள் பலவுளவேயன்ருே! இவற்றை எவ்விதம் மாற்றிக்கொள்வதெனிற் கூறுவேன். இச்சாலேகளில் உங்கட்கு மேலுள்ளார்களான பெற்ருேர் உபாத்தியாயர் முதலானேரிடம் நீவிர் காட்டவேண்டிய கடமையாவதுயாதென ஓர்ந்து பார்ப்போமாயின், உங்கட்களிக்கப்படும் கல்வியைச் செவ்வனே கவனித்துப் பயின்றுவருதல் மட்டேயாகும். அவ்விதம் உங்களாலியன்றவளவு நீவிர் முழுமனதுடன் உழைத்தபின்னரும், அப்பெரியோர் திருப்தியடையாம லிருப்பாராயின், அஃது உங்களது குற்றமாகாதென்பது உண்மையாதலின், அதற்காக நீங்கள் மனத்தாழ்ச்சியடைதலும் அவசியமாகாது. ஏனெனில் உங்கள் உழைப்பை உள்ளபடி மதிப்பிட்டுத் திருப்தியடையவேண்டியவர் உங்களது உபாத்தியாயராவது, தாய்தந்தையராவது அன்று. பின்னே உங்களே ஆட்கொண்டருளும் குருவாகும் பெருமானேயன்ருே! * ஆதலின் நீங்கள் கடமைபூண்டிருக்கும் தாய்தந்

---

* சிற்றரும்பன்சிற்றறி வாளனேதெளிந்தான்
மற்றரும்பன, மலரெனப், போறிவாகிக்
கற்றரும்பியகேள்வியான் மதித்திடக்கதிச்சீர்
முற்றரும்பியமெளனியாய்ப் பரத்திடைமுளேப்பான்.

தையர் முதலினோர்க்குச் செய்யவேண்டிய காரியாதிகளை உங்களாலியன்றவளவு இயற்ற முயலுங்காலே, அதனால் அவை பழுது படுமாயின் அவ்வபஜயத்தையும் குருதேவர்க்கே அர்ப்பணமாக அளித்துவிடுவதே உங்கள் கடமையாகும். ஆகவே ஏதேனும் உயர்ந்ததோர் பரீக்ஷையில் நீவிர் தேர்ச்சியடையாவிடினும் அதற்காக நீங்கள் கவலைகொள்ளல் அவசியமாகாது. ஏனெனில் உங்களுக்கு அப்பரீக்ஷைகள் மிகவுயர்ந்ததுவாத் தோன்றிடினும், குருதேவரது உயர்திருஷ்டியில் அவற்றிற்கு அத்தனை மதிப்புண்டாகாது. நீங்கள் பரீக்ஷைதேறித் தகுந்த பட்டங்கள் அடைந்து வரல்வேண்டுமென்பது குருதேவனது முக்கிய நோக்கமாகாது. பின்னை நீங்கள் யாவரும் அன்புநிறைந்த நற்சீலம் பெற்றோராதல் வேண்டுமென்பதுவே அவரது கருத்தாகும். ஆகவே எவ்வித அபஜயம் நேரிடினும் நீங்கள் மனத்தளர்வடைதலே கூடாது. ஏனெனில் நுஞ்செயற்கள் யாவற்றையும் மதிப்பிட்டுத் திருப்தியடையவேண்டிய அதிபதியாவார் ஸ்ரீகுருதேவரேயாதலாலும், அவர் நீங்கள் செய்து முடித்துக்கொண்டவற்றையல்லாது, செய்ய உத்தேசங்கொள்ளும் நுங்களது அந்தரங்கத்தின் கோரிக்கைகளையே குறிப்பிட்டு உங்களது தகுதியை மதிப்பிடுந் தன்மையராதலாலுமென்க.

இதுகாறும் கூறிப்போந்தவற்றால்நீங்கள் தெளிந்துகொள்ள வேண்டியது யாதெனில், எதிர்ப்படும் யாவரையும் நீங்கள் ஆனந்தமடைவித்தலே வேண்டுமென்க. இதுவே ஸ்ரீகுருதேவன் நுங்களுக்களித்திருக்கும் ஆணையாகும். ஏனெனில் நீங்கள் மனத்துயரங் கொள்வீராயின் அஃது நுங்களொடுமட்டும் நில்லாமல், நுங்களைச் சமீபிக்கும் எவரையும் தாவிப்பிடித்துக் கொள்ளுமோர் தொத்துநோய்போலாகின்றதெனக், குருதேவன் மொழிந்திருப்பதை நீங்கள் மறந்துவிடல் கூடாது. வைசூரியெனும் நோய் ஒரு நோயாளியினண்டையிற் சேரும் பிறரையும் உடனே சம்பந்தித்துத் துன்புறுத்துமாபோல், மனதின் சஞ்சலமும் ஒருவரிடமிருந்து மற்றொருவர்க்கு எளிதிற் பரவுகின்றது. இதனாற்றான் யானும் நீங்கள் குருநாதனையடைய முயலுங்கால் சாதித்துக்

கொள்ளவேண்டிய முதற்சாதன மாகுமென 'முகமலர்ச்சி' எனுங் குணத்தைக் குறிப்பிட்டுக் கூறலுற்றேன் எனக்கொள்க.

இனி இவ்வசனங்களைக் கேட்டவுடன் எப்பொழுதும் இவ் விதம் சந்தோஷமே நிறைந்தவராய் நிற்றற்கு நுங்களால் இயலா மையின் அதற்கு யாதுபுரிவதென நும்மனங்களில் ஓர் வினவெழு மன்றோ! இதற்கு விடையும் அளிப்பேன். உங்கள் மனதில் இன்பதுன்பம் எவையிருப்பினு மவற்றைப் பாராட்டாது சதா காலமும் மலர்ந்த முகத்தையே நீங்கள் காட்டிவரல் வேண்டு மென்க. இப்படி நிற்றல் உள்ளொன்றும் வெளியிலொன்றுமான பொய்வேடத் தோற்றமாகாதோ எனின், ஆகாதென்க. ஏனெ னில் உங்களது யதார்த்தமான ஆன்மநிலையைச் சோதித்துப் பார்ப்போமாயின் அங்குஎப்பொழுதும் இன்பமயமாஞ்சோதியே நிறைந்துநிற்பதால், நீங்கள் யாவரும் அந்நிலையில் ஆனந்தமே சுவ ரூபமாய் பிரகாசிக்கிறீர்களென்பது உண்மையன்றோ! ஆதலின் இவ்வுண்மையை உணர்ந்து நீங்களும் எதிர்ப்படுமெவருக்கும் சந் தோஷ நிறைந்த பார்வையையே காட்டிவரத் துணிவீர்களாயின், அஃது உங்களது ஆன்மவியற்கையை ஸ்தூலசரீரத்தின் அங்க மாகிய மூளையினிடத்தும் ஏற்படுத்திக்கொள்ள முயலுமோர் முயற்சியாகுமேயன்றி வேறுகுமோ! ஆகவே இவ்வகையான பிர யத்தினம் உண்மையில் மேன்மையுடையது வாகுமேயன்றி ஒரு போழ்தும் வீண்வேடப் பாசாங்கு ஆகாதென்பது பெறப் பட்டது.

நீங்கள் துயருறும்பொழுதெல்லாம் அஃது குருதேவருக் குத் தெரியுமன்றோ! பாடசாலையிலும் மற்றைய வியவகாரங்களி லும் நீங்கள் படும் கவலைகள் யாவற்றையும் அவர் நன்கு அறிவர். ஆதலின் அவருங்களை முழுதும் உணர்ந்து நுங்கட்கு எப்பொழு தும் ஆதரவுசெய்ய உள்ளங்கொண்டவரேயாவர். * ஆயினும் பிறர்க் குதவிபுரியு நோக்கமும், ஆவலும் கொண்டோருக்கே அவர் அதிகமாய் ஆதரவுசெய்யுந் தன்மையுடையவ ரென்பதை

---

* சிந்தித்தவெல்லாமென் சிந்தையறிந்தேயுதவ
வந்தகருணை மழையேபராபரமே. தாயுமானவர்.

நீவிர் அறிவீர்கள்.* ஆதலினித்தகைய வெண்ணம் நும்மிடம் குடி கொண்டாற்றுன், குருதேவரும் நீங்கள் கவலையும் அதைரியமும் அடையும்பொழுதெல்லாம் சடுதியில் அவற்றை நீக்கியருளுவார். ஆகவே அந்தரங்கத்திற் றுன்பமுடையீராயினும் பிறர் யாவ ரிடமும் சந்தோஷமே பிரகாசிக்குமுகத்தைக் காட்டுவீராயின், குருநாதனும் நுங்களை யாதரித்துக் கட்டிக்காத்து அருளுவரென் பதிற் றடையுமுண்டோ? அவ்விதம் மனத்தினுட் டுயரடையும் தருணங்களிலெல்லாம் கருணையங்கடலான குருநாதனையே நினை ந்து உள்ளுருகி, "தீதில் பரமாம் குருதேவரே! எமக்கு வாய்த்த தந்தைவடிவான பேருறவே! எப்புறத்தும் யாவ்ரும் ஆனந்த மயமேயாகும் வண்ணம் எந்தநாளும் யாங்கள் ஆனந்தமே நிறை ந்த பார்வையுடனிருக்க ஐயனே நீ முன்னிற்கவேண்டும்" என நீவிர் வழுத்திவரல்வேண்டும். எவ்வித உதவியையும் உலகினர் பொருட்டுச் செய்ய நீவிர் எண்ணங்கொள்வீராயின் அதை உடனே குருநாதனும் நுங்கட்கு முழுவதுமுவந்து அளிப்பன் என்பதில் சந்தேகமேயில்லை.

---

* சித்தநினைவுஞ் செயுஞ்செயலுநீயெனவா
ழுத்தமர்கட்கான வுறவேபராபரமே. தாயுமானவர்.

நோக்கற்கரிதான நுண்ணியவான்மோனநிலை
தாக்கற்குபாயஞ் சமைத்தபிரான்
காக்குமுயிரத்தனைக்கு நானடிமையாதலினுல்
யானெனதென்றித்தனைக்கும் பேசவிடமில். தாயுமானவர்,

சிந்தைபோய்நானெனல்போய்த் தேக்கவின்பமாமழையை
வந்துபொழிந்தனைநீ வாழிபராபரமே.

நந்தமதென்றெண்ணி நலிந்தவுடல்வேறுக்கி
வந்தபொருளுன்னதல்ல வென்றெனதுவல்லமையும்
உந்தனதன்றெல்லா நமதென்றேயுட்புகுந்த
தந்தையுநீமற்று மருளாந்தாயுமானவனே. தாயுமானவர் புகழ்.

நினையுநினைவுக்கெட்டாத நெறிபெற்றுணர்ந்தநெறியாளா!
வினையைக்கரைக்கும்பரமவின்ப வெள்ளப்பெருக்கே! நினதருளான்
மனைவிபுதல்வரன்னைபிதா மாடுவீடென்றிடுமயக்கந்தனையு
மறந்திங்குனைமறவாத்தன்மை வருமோதமியனேற்கே.

இதுவே நீங்களுடைய முயலவேண்டிய முதற்சாதனமாகும் "முக்மலர்ச்சி" அல்லது "மலர்ந்த பார்வைகள்" என்க. இத்தகைய குணங்களைச் சம்பாதித்துக்கொண்ட பின்னர் ஜீவன் முக்தனும் குருநாதனிடம் சீடனுயடைக்கலம்புகுந்த நீங்கள் அப்பால் அவ் வள்ளலுக்கு புத்திரர்களாதலையும் அடைவீர்கள். புத்திரபாவ மென்பது முக்திமார்க்கத்தில் சீடபாவத்திற்கு மப்பாலுள்ளதோர் நிலையைக் குறிப்பிடும் பதமாகும். இந்நிலையில் உங்கள் யாவரை யும் குருதேவர் தனது பிரக்ஞையின் விலாஸத்திற் குள்ளாக்கி, உங்களது மனங்களினின்று மெழும் மலங் கலந்தவாசனை தன்மன திற் கெட்டாதபடி ஏற்படுத்தியிருந்ததோர் திரையை அறவே நீக்கிவிட்டு, நுங்களை விசேஷ நெருக்கத்துடன் தன்னுெடுமைக்கி யப்படுத்திக்கொள்வர். இவ்விதம் தனக்கு முங்கட்கு மத்தியில் ஓர் திரையை ஏற்படுத்திக்கொள்ளல் இப்பொழுது அவசியமாகா தன்றோ! ஏனெனில், நீங்கள் யாவரும் மிகச் சிறுவர்களேயாத லின் உங்களிடமின்னும் காமமாதி துற்குணங்கள் அத்தனையதிக மாய் நிலைபெறவில்லை. உங்களிடம் சிறிது அன்பின்மையும் அதை ரியமுமே காணப்படுகின்றன. ஆயினும் குருதேவன் தனது காரி யங்களில் நீங்கள் தனக்குதவி புரிவீர்களென்று கண்டு, உங்களை தனதருகிற் சேர்ப்பித்துக் கொண்டிருத்தலே, உங்களிடம் மேம் பட்டதோர் நற்குணமமைந்திருப்பதை பகிரங்கமாய் வெளிக் காட்டுகிறதன்றோ! ஆதலின் அதிசமீபத்தில் நீங்களொவ்வொரு ரும் குருநாதரது புத்திரனுதலை அடையக்கூடும்; ஆகவே அத னிமித்தம் யான் இதுகாறும் இயம்பிவந்த பெருங்குணமாம் சாத னத்தை சாதகஞ்செய்துகொள்ள முயலுதல் நுங்கடமையாகும்.

நீங்கள் யாவரும் ஞானமூர்த்தியாம் அரசனெனத் தகும் குருநாதனது குழந்தைகளேயாகி நிற்கின்றனரன்றோ! ஓர் மன்ன னின் மைந்தர்கள் தங்களரண்மனையை விட்டு வெளியேறி வீதி வழிவருங்காலை, அத்தேயத்தின் குடிகள் யாவரும், அவ்விராஜ குமாரர்கள் தம்பிதாவாகு மரசனது கம்பீர நடையுடைகளைச் சிறிதளவு வெளிக்காட்டுவரென எதிர்பார்ப்பரன்றோ! அவ்விதமே உங்கள் யாவருக்கும் தந்தையேயான ஸ்ரீகுருதேவனது உயர் குணங்களையு நீங்கள் எங்கிருப்பினும் வெளியிற் பிரகாசிக்கும்

வண்ணம் நடித்துக்காட்டி வருவீராகி, இவ்வுலகில் அம்மகாபுருடனுக்கேற்ற பிரதிநிதிகளாய் நிற்றலும் வேண்டும். அரசகுமாரர்கள் தம் தந்தையினது ராஜரீகப்பிரபாவத்தை சிறிதளவு உலகிற்றமது நடத்தைகளாற் காட்டி வருவதுபோலவே நீங்களும் குருதேவனது மகிமையையும் சிறிது உலகில் நுங்கள் மூலமாய்க் காட்டிவருதல் அவசியமாகும். நீங்கள் யாவரும் வாலிபர்களேயாயினும் உங்கள் தந்தையாரின் குணங்களமையப் பெற்றவர்களாயிருத்தல் வேண்டுமன்றோ! அவரது உன்னத சுவபாவம், ராஜரீகமான கம்பீரம், கௌரவம் இவை இப்பொழுதே நுங்களிடம் விளங்காவிடின், அத்தகைய பெரியோனிடம் நீவிர் பிறப்படைந்தவரென உலகினர் கொள்ளுதல் எங்ஙனமமையும். இவ்வித காரணங்களால் பாடசாலையிலிருக்குநாளில் உங்களைப்போன்ற சிறுவர்களையோ, அல்லது வீடுகளிற் பெற்றோர் முதலிய மூத்தோரையோ, யாவரையாயினும் நீங்கள் காணும்பொழுதெல்லாம் சந்தோஷத்தையே பொழியும் முகவிலாசத்துடன் விளங்கி, எவரையும் ஆனந்தமடைவித்து வரல் நுங்கள் கடமையேயாகுமன்றோ!

நுஞ்சகோதரர்களாகு மானிடர் யாவரையும் நுங்கள் முகங்களின் வழியாய் ஸ்ரீகுருதேவரே உற்று நோக்கிவரத் திருவுள்ளம் குவித்திருக்கிறாரென்பதை நீங்கள் மறத்தல் கூடாது. அதற்குக் காரணம் யாதோவெனில் நீங்கள் யாவரும் உலகினரின்மீது அன்பு செலுத்து மியற்கைய ராதலின்றாற்றானென்க. உங்களிலும் பன்மடங்கதிகமாய் உலகின்மீது குருதேவன் அன்புவைக்கு மாற்றல் உடையராயினும், நீங்கள் உலகை நேசிக்கும் வழியானது அவனது வழிக்குச் சற்று வேறாகிய வழியாதலின், உங்கள் வழிகளையுமறிந்து நீங்கள் நேசிக்கும் விதமாகவும் தானுமன்பு செலுத்த வேண்டுமெனும் கருத்துடன், அவன் உங்கள் பார்வையல்லது திருஷ்டியினுள்ளும் பிரவேசிக்க விச்சை கொள்ளுகிறானெனக் கொள்க. உங்களில் ஒவ்வொருவரும், பரமனது காரியமேயாகிய இப்பிரபஞ்சத்தின் அழகு வைபவங்களைக் கண்டறிந்துகொள்ளுதற்கென, ஸ்ரீகுருதேவர்க்கு நூதன நூதனமான திருஷ்டிகளையளித்தற்குதவும் ஒவ்வோர் ஜன்னலேயாவீர். ஆகவே உங்களது சந்தோஷம், தைரியம், அன்புமுதலிய நற்குணங்கள் யாவும் குரு

தேவன் அருமையாய் சம்பாதித்திருக்கும் விலையுயர்ந்த சிறுரத்தினங்களாகும். இவற்றைக் குருநாதனுந் தனது சிரத்தில் தரிக்கத் தகுந்ததோர் கிரீடத்தில் இழைத்துக்கொள்ள விச்சிக்கின்றனன். ஆதலாற்றான் உங்களைத் தன் சீடர்களாய் ஏற்றுக்கொண்டு உங்கட்கேற்ற உதவிகளைப்புரிந்து அடிமைகொள்ள முன்வந்திருக்கிறானென்பதை நீங்கள் உணர்ந்தறிந்து கொள்ளல்வேண்டும். இனி இக்குருதேவனும் பிரபஞ்சத்தையாளும் கருமமாகு நியதியினது ஓர் கருவியேயாதலின், உலகிற் குதவிபுரிவதில் நீங்கள் உங்களைப் பழக்குவித்துக் கொள்ளுவீராயின், வேண்டியவளவு உங்களுக்குத் தானும் உதவியருளுவனன்றோ! *

யானிதுகாறு மியம்பியவற்றால் நீங்கள் யாவரும் தெளிந்துணரவேண்டியது யாதெனில், இம்மகா மார்க்கத்தில் பழக்கமடைந்து மேற்செல்லு முத்தேசமுடையீராய நீங்கள் யாவரும் பிரதிதினமும் ஸ்ரீகுருநாதனும் பெருமானை மனத்திலுன்னி "நீதில்பரமாம் குருதேவரே! எமக்கு வாய்த்த தந்தை வடிவான பேருறவே! யாங்கள் அனைவரும் நினதருளாலே யாவரிடமு மலர்ச்சியுடை முகத்தையே காட்டி வருவோமாக" என நும் மனத்துள்ளேயே பிரதிக்ஞை யொன்றைச் செய்துவரல்வேண்டு மென்பதே.

---

* ஒன்றதாய்ப் பலவா யுயிர்த்திரட் கெலாமுறுதி
யென்றதா யென்று முள்ளதா யெவற்றினு மிசைய
நின்றதாய் நிலை நின்றிடும் அறிஞ வென்னெஞ்ச
மன்றதா யின்ப வுருக்கொடு நடத்திடின் வாழ்வேன்.

தாயுமானவர்.

கணமதேனு நின்காரணந் தன்னையே கருத்திலு
ணரு மாதவர்க் கானந்த முதவினை—

அவனே பரமு மவனே குருவு
மவனே யகில மனைத்து—மவனேதா
மானவரே சொன்னலவரே குருவெனக்கு
நானவனுய் நிற்ப தெந்நாள்.

2. தீரமான மொழிகள்.

யானுங்களுக்கு கூற முன்வந்த விஷயங்கள் நான்கனுள் முதலாவதான "மலர்ச்சியுடைய பார்வை"களைப் பற்றி நெருநல் பேசினேனாதலின், இன்று இரண்டாம் சாதனமான "தீர மொழிகள்" என்பதை விரிக்கத் துடங்குவேன். தைரியம் அல்லது உறுதியெனுங்குணம் பெரியோனாங் குருநாதனிடம் சீட பாவமடைந்தவன் எவனிடத்திலும் விளங்கவேண்டியவற்றுள் ளொன்றே யாகுமென்பதை நீவிர் அறிந்துகொள்ளல்வேண்டும். தைரியமென்பது யாதோவெனில் கூறுவேன். ஓரிடத்தில் சில குழந்தைகள் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்குங்கால் அவை தடுமாறி பூமியிலிடறி விழுமாயின் உடனே அதனாலுண்டாகும் வேதனையைப் பொறுக்கவியலா தழத்துடங்குமன்றோ! இவ்விதம் பூமியில் வீழ்வதனால் துன்பமடையும்பொழுது வயதுவராத சிறு பிள்ளைகள் அழுவது சகஜமேயாகும். ஆயினும் கீழேவிழுந்து வேதனை அடையுந்தருணத்திலுங்கூட கண்ணீர்விடாத குழந்தை யொன்றைச் சில அபூர்வ சமயங்களில் நாம் காண்பதுண்டன்றோ! இத்தன்மையான குழந்தையை நாம் தைரியமுள்ளதுவெனக் கூறுகிறோம். இக்குழந்தை மற்றவைகளைப்போலல்லாது தைரியத்துடன் நிற்கும் காரணமாவதியாதோவெனில், தனக்குத்துன்பம் விளைவித்த தனது சரீரத்தைக் காட்டிலும், தான் உண்மையில் அதிக தைரியமுடை வஸ்துவேயெனும் நம்பிக்கையை அஃது கொள்ளலாற்றான் என்க. இந்நம்பிக்கை அல்லதுணர்ச்சியே தைரியமாங் குணத்திலுள்ள முக்கிய அம்சமாகும். துன்பமல்லது துக்கத்தைத் தனக்குக் கொணர்விப்பதாகிய தன் ஸ்தூலவுடம்பை விட்டுத் தன்னைத்தனியே பிறித்துக்கொண்டு, தனதுடம்பைக் காட்டினும் தானே பலமுடையன் என, ஒருவன் தன்னுள்ளே யறிந்துகொள்ளலே தைரியமாகுமென்க. ஆதலின் தன்னை யடக்கியாளப்பார்க்கும் துன்பத்தைத் தானே யடக்கியாளத் துணியுமுறுதியே தைரியமெனப்படுமென்க.

அன்றியும் யுத்தமுதலிய மற்ற வழிகளில் தைரியத்தைக் காட்டும் மானிடரும் பலருண்டென்பதையும் நீங்கள் அறிவீர்கள். போருக்குச் செல்லுவோன் ஆங்கு தனதுயிரையுமிழக்க நேரும் ஆபத்துக்கள் வருமென்பதை யறிந்தேசெல்கிறுன். ஆயினும் பிறரின் க்ஷேமம் தன்றேயத்தின் கவுரவமிவற்றையுன்னித் தன்னுயிரிழக்கு மாபத்தையு மிலக்ஷியஞ்செய்யாது நிற்கத் துணிகிறுன். இங்கு இவனது துணிவையாராயின் அஃது கேவலம் ஸ்தூலவுடம்பை மதிக்காதுநிற்கும் தைரியம் மாத்திரமன்றென்பது புலப்படும். ஓர் ஊரில் ஒரு துஷ்டன் மற்றொருவனை நோக்கி 'யுன்னையானுதைத்துத் தள்ளிவிடுவேன்' என்று வீரம்பேசின், அஃது உண்மையான தைரியமாகுமோ? பின்னை யதார்த்தமான தைரியமென்பது அயோக்கியத்தன்மை சிறிதுமின்றி, பிறருயிரைக் காக்கும்பொருட்டுத் தனதுயிரை விடத்துணியுந் துணிவேயாகும். தண்ணீரில் மூழ்கியிறக்குந் தருணத்திலுள்ளா னொருவனைக் காக்கும்பொருட்டுத் தன்னுயிரையு மிழக்கத் துணியுமொருவனையாவது, அல்லது நெருப்புப் பிடித்தெரியும் வீட்டிற் கிடப்போனைத் தப்புவித்தற்கா வந்நெருப்பினுட்டானும் நுழையு வீரனொருவனையாவது பாருங்கள். இவ்வகையினரை நாமனைவரும் உள்ளபடியே தைரியமுடையோர் எனவழைப்போமன்றே! ஆதலின் சிலாக்கியமானதோர் விஷயத்தில் தன்னுயிரிழக்கத் துணியுந்துணிவு தைரியமெனுங் குணத்திலுள்ள மற்றோர் அம்சமாகும். இத்தன்மையினர் தம்முத்தம சுபாவத்துடன் தம்மையைக்கியப்படுத்திக் கொண்டோராகி, தமது அதமவியற்கை மேலோங்கித் தம்மையடக்கித் தம்மிடங் கோழைத்தனத்தைத் தாபித்துவிடாது ஜாக்கிரதையுட னிருப்பவரேயாவர். *

---

* புன்புலான் மயிர்த்தோ னரம்பென்பு மொத்திடு
புலைக்குடிலி லருவருப்புப்
பொய்யல்லவே, யிதனை மெய்யென்று நம்பியென்
புத்திசெலுமோ பாழிலே,
துன்பமா யலையவோ, வுலகநடை யையவொரு
சொப்பனத்திலும் வேண்டிலேன்,
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

தாயுமானவர்,

இனி நாமனைவரும் மிகத் தைரியமுடையோரா யிருத்தலே வேண்டும்; ஏனெனில் நமது குருநாதர் தைரியமே வடிவுடைய ராதலினென்க. * அவருக்கே யாட்பட்ட நம்மனைவருக்கும் தைரியமெனுங் குணம் அவசியம் வேண்டுமென்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இனி குருநாதரும் இவ்விதம் தைரிய முற்றவரா யிருத்தற்குக் காரணம் யாதோவெனின் அவரிடம் சகல வீரியமும் நிறைந்து நிற்பதாலென்க. அவரது நினைவுணர்வுகள் யாவும் கடவுளது குணங்களோ டொத்தவைகளன்றோ! கடவுள் சகல வீரியமும் பிறக்குமிடமேயாதலின் அவனோடைக்கியமுற்ற குருநாதனு மவ்வாறே யாவரென்க. கிறிஸ்தவமதத்தின் ஆசாரியனாகிய யேசுவெனும் பெரியோனைப்பற்றிய வருணனையில் ஓரிடத்தில், 'யுகங்கள்தோறு மசைவுறாக் குன்றமே' எனக் கூறப்பட்டிருக்கின்றது. அதனுட்கருத்தாவது கொந்தளிப்புள்ள பெருங்கடலின் மத்தியில் அசையாக் குன்றுபோல் † அம்

---

* பாரோடுநன் னீராதி யொன்றோ டொன்றாகவே
  பற்றிலய மாகுபோழ்து
பரவெளியின் மருவுவீர், கற்பாந்த வெள்ளம்
  பரந்திடி னதற்குமீதே
நீரிலுறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை
  நிற்பீர், விகற்பமாகி
நெடியமுகி லேழும் பரந்துவரு ஷிக்கிலோர்
  நிலவுமதி மண்டலமதே
யூரென விளங்குவீர், பிரமாதி முடிவில்விடை
  யூர்தியரு ளாலுலவுவீ
ருலகங்கள் கீழ்மேல வாகப் பெருங்காற்
  றுலாவினற் றாரணையினான்
மேருவென வசையாம னிற்கவல்லீ, ருமது
  மேதக்க சித்தியெளிதோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
  வித்தகச் சித்தர்கணமே.

† உலகமெங்குங்கலந்துதானே திகழனந்தானந்தமயக்குன்றே!
சமயகோடியத்தனையுந் தொடர்ந்துபுகுமாதிநட்பே!
இமையளவுமுபகாரமல்லால் வேறொன்றியக்கா
நிர்க்குணக்கடலா யிருந்தவொன்றே!
எந்தையேயெம்மானே யென்றென்றேங்கிக்
கன்றாகிக்கதறினர்க்குச் சேதாவாகிக்
கடிதினில்வந்தருள்கூருங் கருணைவிண்ணே! தாயுமானவர்.

மகாபுருடன் விளங்கினன் என்பதும், அக்கடலில் வீழ்ந்து தன் புருவோர் பரிதவிப்புடன் அலைகண்மத்தியி லாழ்ந்துவிடாமற் றம்மைத் தப்புவித்துக் கொள்ளும்பொருட்டு, ஆங்கசையாது நிற்கும் பெருங்குன்றம்போன்று விளங்கும் குருநாதனுக்கும் அவரைப் பற்றிக்கொள்ளும் வண்ணம் முயலவேண்டுமென்பதுமே என்க. குருதேவன் இவ்வாறே யாவருக்கும் பேருதவியாய் விளங்கும் பொருளேயாவன். * சம்சார சமுத்திரத்தில் வீழ்ந்து பரிதவிக்கும் மானிடரனைவரும் தன்னைப்பற்றிக் கரையேறியுய்யும்வண்ணம் அசைவிலா வுறுதியுடைப் பாறையேபோன்று விளங்குகின்றனர். இதுவுமன்றி யவர் சகல மானிடவர்க்கத்தின் துன்பமூட்டைகளையுந் தன்மீது சுமற்றிக்கொண்டு தாங்குதற் குட்பட்டிருத்தலாலும் அதற்கேற்றவாறு மிகத்துணிவுந் தைரியமுடையவராய் நிற்கின்றனரெனவு மறிக. நாமிங்கு பெருஞ்சுமைகளைத் தாங்கிச்செல்லும் கூலிக்காரர்களைக் கண்டு வியந்து அத்தகைய பாரங்களை நாமுஞ்சுமக்க வியலாமையைக் கண்டு நிற்பதுமுண்டன்றோ! இம்மாதிரியே மற்றவரால் முடியாதவிதமாய் உலகினரின் தீமை, பாபங்கண்முதலிய கருமச்சுமைகளில் சில பாகங்களை பெரியோரான குருமூர்த்திகள் தாங்கிவருகிறார்கள். அவர்கள் நம்மிடம் பிரீதியுடன் அவ்விதம்பரிந்து மேற்கூறிய நமது பாபமூட்டைகளைச் சுமந்துநிற்கின்றனர். † இவ்விதமாய் உலகினரின் பாபங்களைச் சுமந்துநிற்றலும் அவர்களிடம் மிகுந்த தைரியமு முறுதியுநிறைந்து விளங்கலாற்றுனென்றறிக.

---

* அருள்பழுத்தபழச்சுவையே கரும்பேதேனே!
யாரமிர்தேசுண்ணே, யரியவான்
பொருளனைத்துந் தரும்பொருளே!
கருணைநீங்காப்பூரணமாய் நின்றவொன்றேபுனிதவாழ்வே!
கருதரியகருத்ததனுட் கருத்தாய்மேவி
....
யுயிர்த்திரளை யாட்டும்பொருளே! — தாயுமானவர்.

† எவ்வுயிர்த்திரளையுமியக்கி மன்னுந்தண்ணருள்வடிவமே,
யுனக்கன்புவைத்துந் துன்னுமின்னலேன்,
யானெனுமகந்தை யேன்சொலாய்! — தாயுமானவர்.

குருநாதனிடமுள்ள வித்தைரியமெனுங் குணத்தின்கண் கர்வமல்லது தற்பெருமை யென்பதெள்ளளவு மில்லையென்பதையு நீவிருணருதல் வேண்டும். உலகினரை நோக்கி விசேட தைரிய முள்ளவனெனக் குருதேவன் தன்னைக் காட்டிக்கொள்ளலுமுண்டோ? பகவானான புத்தர் உலகினிலவதரித்தருளிய பொழுதும், பகவான் மைத்திரேயர் ஸ்ரீகிருஷ்ணனாகவும் பின்னர் கிறிஸ்து நாதராயும் இங்கு தோன்றியபொழுதும், இவர்களைக் கண்ணுற்ற உலகத்தவர் அவமதித்து பரிகாசம்பண்ணிவந்ததையும் இம்மகா புருடர் லக்ஷியம் செய்தனரோ? இவ்விதம் உலகினரின் அவமதிப்பை சிறிதுங் கவனியாது நிற்றலே பெரியோரின் மனவுறுதியை வெளியிற்காட்டி வருகிறதன்றோ! கடவுளின் காரியாதிகளை நிறைவேற்றுதற்காக்வே இக்குருமூர்த்திகள் இவ்வுலகில் வசிக்கின்றனராதலின், கடவுளின் உத்தேசமல்லது ஆக்ஞை யின்னதென்பதை யறியாமாந்தர் பலர்கூடிப் பேசுமொழிகள் பயனுளவாமோ? ஆகாவென்பது திண்ணமாதலின் அவற்றைப் பெரியோர்கள் பொருளாய் மதிப்பதில்லை யென்பதுண்மையே. *

இனிக் குருநாதனும் தன்னிடமுள விவ்வுறுதியாங் குணத்தை நோக்கி ஆசைகொள்ளு முலகினருக்கெல்லாம் அஃதைப் பகிர்ந்தளிக்க விச்சைகொள்ளுகிறார். தனது குணசம்பத்துக்களையெல்லாம் இவ்விதமே பிறர்க்களிப்பதுவே அவரது விருப்பமாகும். உங்கட்கு மனத்தளர்ச்சி, பயமிவை யுண்டாகுமாயின், அவையாவற்றிற்கும் பரிகாரமாகும் தைரியமெனுங்குணம் வேண்டியவளவு குருநாதனிடம் தயாராய் நிறைந்திருக்கின்றது. அதை ஏற்றுக்கொள்ளும் வழியைமட்டும் நீவிரறிந்து கொள்ளுவீராயின் அஃதையெடுத் தாண்டுகொள்ளும் பாக்கியமுமுங்களுக்குக் கிட்டுமென்பதிற் றடையுமுண்டோ? †

---

* பாலரொடுபேயர்பித்தர் பான்மையெனநிற்பதுவே
சீலமிகுஞானியர்தஞ் செய்கைபராபரமே! — தாயுமானவர்.

† ஏதமின்றித்தன் னடியிணைக்கன்புதாணீட்டுங்
காதலன்பர்க்குக் கதிநிலையீதெனக்காட்டும்
போதநித்திய புண்ணிய! — தாயுமானவர்.

கைவிடாதேயென்ற வன்பருக்கன்பாய்க்
கருத்தூடுணர்த்து குருவே!

176031

இவ்விதமான தைரியமெனுங் குணத்தை நாமனைவருமடைதல் வேண்டுமென்பதற்கு மற்றுமோர் காரணம் யாதெனில், உலகிலெப்புறத்திலும் தைரியமென்பது இத்தருணத்தில் மிகவும் தேவையாயிருத்த லாற்றுனென்க. உலகின்கண் துக்கமுந்துன்பம் மிகவதிகமாயிருத்தலை நீங்கள் அறிவீர்கள். அவற்றைத் தாண்டுதற்கு வழியறியாத பலவீனராய் கோடிக்கணக்கான மன்பதைகளு முளரென்பது முங்கட்கு தெரிந்தவிஷயமே. அவற்றையெல்லாம் கரையேற்றுதற்கு எவ்வளவுறுதியும் வீரியமும் வேண்டுமென்பதை யாலோசியுங்கள். அவ்வித மிவ்வுறுதியை தம்மொழுக்கத்திலே காட்டி பிறரையுமவ்வாறே யஃதை கைக்கொள்ளும் வண்ணம் தூண்டிவரத்தக்க மானிடர் அநேகர் தற்காலத்தில் அவசியம் வேண்டுமன்றோ!

இனியித்தைரியமெனுங் குணத்திலும் பலவிதங்களுண்டு. அவையாவன: முதலாவது, செயல்களில் தைரியம்; அஃது தீப்பிடித்தவீட்டிற் றுணிவுட னுழைவோனிடம் விளங்குவதுபோன்றது. இரண்டாவது, நினைவில் தீரமும், மூன்றுவது வசனங்களில் தீரமுமாகும். இவற்றுள் கடையதான 'வசனங்களில் தைரிய'த்தைப்பற்றி யிப்பொழுது பேசுவேன்.

இனிப்போலித் தைரியமென்பது மொன்றுண்டென்பதை முன்னமே விளக்கினேனன்றோ! சிறு பிள்ளைகளில் ஒருவனுக்கு ஒவ்வோர் வேளைகளில் துஷ்டகுணம் உண்டாகும்பொழுது மற்றொருவனை நோக்கியவன் 'உன்னை யடித்துவிடுவேன்' என பயமுறுத்துவதை நாம் பார்க்கிறோம். இவ்வசனங்கள் யதார்த்தமான தைரியமுடையனவாகுமோ? ஆகமாட்டா. ஏனெனில், உண்மையான தைரியத்தில் மூன்று அம்சங்களிருத்தல் வேண்டும். அவையாவன: உண்மைத் தைரியமுடைய வசனங்கள் அன்புடையனவாயும், சத்தியமுள்ளனவாயும், அப்படியே யழகுமுடையனவாயும் விளங்கலேவேண்டும். இம்முக்குணங்களும் எங்கு விளங்குமோ அங்கேதான் உண்மைத் தைரியம் பிரகாசிக்குமெனக்கொள்ளலே தகும். ஆதலின் குருதேவனுக் கடிமை

பூண்ட நீவிர் யாவரும் அவரைப்போல் தைரியமுடையீராய் நிற்றல் வேண்டுமாயின், நமது வசனங்களிலும் முக்குணங்களு மிருக்கவேண்டுமென்பதை மறவாதிருத்தலே கடமை. நமது வசனங்கள் யாவும், அன்பு, சத்திய, மழகிவை பொருந்தியன வாதலே வேண்டுமென்க.

முதலில் அன்புடை வசனங்கள் யாவையென விளக்கு வேன். கோபங்கொண்டு நாம் ஒரு மொழிபேசின் அஃது அன் புடையதாகாதன்றே! நமக்கு அடிக்கடி கோபம் வருவது சக ஜமே. அஃதை நிவிர்த்தித்துக்கொள்ளமுடியாமலே பொழுதுபோ க்குகிறோம். கோபம் வருந் தருணங்களிலெல்லாம் அக்கோபத் தை நம்மாற்றடுக்க முடியாமையையு மடிக்கடி வெளியிற்சொல் லிக்கொள்ளுகிறோம். இஃதுசிதமன்று, பின்னை நமக்குக் கோபம் வரினும் அதற்கு வசப்பட்டு கோபச்சொற்களைப் பேசாது நிற்ற ற்கு முயலுதலேவேண்டும்.* கோபம் வரும்படி விடுதலே நியாய மன்று, ஆயினும் கோபம் வந்தவுடன் கோபச்சொற்களைப் பேசற் கும், கோபம்வரினு மஃதை யுள்ளேயேயடக்கி கோபச்சொற் களைப் பேசாது நிற்றற்கும் வித்தியாசமுண்டன்றே! ஆதலின் கோபத்தையறவே நீக்கிக்கொள்ள முடியாதுபோயினும், அஃதை மனத்துள்ளேயே நிற்கும்படியாவது செய்துகொண்டு அவ்வித கோபஞ் சிறிதாயினுமுள்ள வசனங்களை மொழியாது ஒழுகிவரு தற்குப் பிரயாசைப்படுதலே வேண்டுமன்றே!

பிறர்க்கு எவ்விதமேனும் துன்பமென்பதை விளைவியாத வசனமே அன்புடையதாகும். மானிடர் எண்ணிறந்த வழிகளில் யோசனையின்றியே பிறர்க்கு மனத்துன்ப முண்டாக்கிவிடுகிறார் கள். அன்னியனொருவனைப் பற்றிக் கெடுதலாகிய செய்தி யொன்று நமக்குத் தெரிந்திருந்தா லஃதைப்பற்றி நாம் மற்றும் வேறொருவரிடத்தில் கூசாது பேசுவது வழக்கமன்றோ! இஃது எவ்வாற்றானு மன்புபொருந்திய செய்கையாகாது. பிறரைப் பற்றியது எதுவும் முற்றிலும் சிலாக்கியமல்லாது கடுகளவேனும்

* பொறிவழியேயேழை பொறியாயுழல்வதுநின்
னறிவின்விதித்தவிதி யாமோபராபரமே! தாயுமானவர்.

கெடுதல் கலந்ததாயிருப்பின், அஃதையின்னு மற்றவரிடம் நாம் பேசுதல் அடாது. பின்னையவற்றை நம்முள்ளேயே கிடந்தழுந் தும்படி புதைத்துவிடவே வேண்டும். ஏனெனில், குருதேவனுக் குச் சீடர்களான நுங்கள் கடமையாவது, பிறரிடமுள்ள வீரிய முதலிய நற்குணங்களைத் தேடியானந்தித்தலு, மவற்றையே பிற ரிடம் பேசிவருதலுமேயன்றி வேறாகாதாதலினென்க. இவ்வி தஞ்செய்து வருவீர்களாயின் உங்களிடமிருக்கு நற்குணங்களு முறுதியடைவதை நீங்களே கண்டுகொள்வீர்கள். ஆகவே ஒருவ னிடத்தில் விசேஷ கோழைத்தனமுஞ் சிறிதளவு மாத்திரமே வீரியமும் நிற்கக் காண்பீராயின், அவற்றுள் அக்கடுகளவுள்ள வீரியமாம் நற்குணத்தையே நீவிர் குறிப்பிட்டுப் பேணுதல் வேண்டும். அவ்வித மவனிடந் தங்கும் வீரியாம்சத்தையே பேணி நிற்பீராயின், அவனிடத்திலேயே யக்குணமும் பலமடை ந்து ஆழ்ந்து அபிவிர்த்தியடைந்து வரும்படி செய்துவிடுவது மன்றி, நீங்களு மந்நற்குணத்தில் முன்னினுமதிகமாய் நிலைபெற்ற வர்களாகி விடுவதையுங் காணலாம். அன்னியரிடமுள்ள பலம் தைரியமிவற்றை நாம் மெச்சிப் புகழும்பொழுது அவை நம்முள் ளும் வேறான்றி நாமுமவைமயமாகி விடுகிறோம். இதன் கார ணம் யாதோவெனில் கூறுவேன். எங்கும் எவ்விடத்தும் நிறைந்து விளங்கும் சேதனமாம் கடவுளின் வாழ்வு ஏகமயமேயாகி உங்க ளிடத்திலும், என்மாட்டும், மற்று நுங்கள் திருஷ்டியிற்படு மன் னிய மானிடரிடத்திலும் பிரகாசிக்கிறதன்றோ! ஆதலின் பிற னொருவனிடத்தில் நற்குணமொன்றைக் கண்டு நீங்கள் சந்தோஷ மடையும் பொழுதெல்லாம் அவ்வன்னியனிடத்திலும் விளங்கா நின்ற கடவுளையேயன்றோ நீவிர் கண்டு ஆனந்திக்கின்றீர். அத் தருணத்தில் உம்முட் டங்கிநிற்கும் கடவுளது அம்சமாகும் நன் மையாமழகும் கிளர்ச்சியடைகின்றது. நுங்களிடம் தைரியத் தின் வடிவமாய் நிற்கும் கடவுளே நுங்களைக்கண்டு சந்தோஷிக்கு மன்னியனிடமும் தன்னம்சமா மக்குணத்தைத் தூண்டியெழு ப்புகின்றனர்.

இனி நீங்கள் எவருடனும் சம்பாஷிக்கும்பொழுது மரி யாதையற்ற வசனங்களை யொருபோது முபயோகித்தல் கூடாது.

ஒருவனைப் பரிகாசம்பண்ணுவது மவனை யவமதித்தலே யாகு மென்பதை நீவிர் அறிந்துணருதல் வேண்டும். சிலசமயங்களில் பிறரைப்பற்றி வேடிக்கையாய் நீங்கள் கதைகள் சொல்லுவது முண்டன்றோ! இவ்வித கதைகளிலெல்லாம் சொற்பவளவு அழுக்காறு நிறைந்து நிற்கின்றதென்பதற் கையமில்லை. பிறர் நகைக்கும்வண்ணம் நீவிர் எடுத்துக்காட்ட உத்தேசிக்கும் கடுகளவு ஆபாசமாவது அக்கதைகளி லில்லாமலிருக்குமோ? அவ்விதம் வேறொருவரை நகைப்புக் கிடமாக்குவது பெரியோனுங் குருநாதனையண்டிய சீடர்களின் தொழிலாவதெங்ஙனம்? குருதேவனது சீடர்களாம் நுங்கட்கு பிறரிடமுள்ள நற்குணத்தை மட்டுங் கிரஹிப்பதுவேயன்றி அவர்களைக் கண்ணுற்று நகைப்பதுங் கடமையாகுமோ? ஆதலினிவ்வகையான வேடிக்கைக் கதைகளைப் பிறரைப்பற்றி நீங்கள் கூறுவதால் அவர்களை மற்றவர் நகைக்கும்படி செய்தல் கூடாது. குருவின் சீடர்களல்லாதார் செய்யுஞ்செய்கையே யிதுவாகுமன்றோ! பின்னை ஆண், பெண், குழந்தை இவர்களில் எவரைக்காணினும், அவரை ஸ்ரீகுருதேவன் எவ்வித திருஷ்டிகொண்டு பார்ப்பனோ அவ்விதமே நாமனைவரும் காணுதல்வேண்டும். ஸ்ரீகுருநாதன் எப்பொழுதும் பிறர் சமீபிக்க முடியாதபடி கம்பீரமான பார்வையுட னிருப்பவரல்ல, பின்னை ஹாஸ்யரஸமு மவரிடத்தில் நிறைந்து விளங்குகிறதாதலின், சாமானிய மானிடரின் குற்றங்குறைகளையெல்லா முணர்ந்தறிந்துகொள்ளுந் திறல்படைத்தவரேயாவர். எச்சமயத்திலும் எவ்வகைச் சந்தர்ப்பத்திலும் ஏற்படும் ஊழல்கள் ஆபாஸங்கள் யாவற்றையு முடனே யறிந்துகொள்ளுவர். ஆயினும் நாம் பிறரைத் தாழ்வுடன் மதித்து நகைப்பதுபோல் அவர் ஒருபோதும் நகைத்தல் செய்யார். அவர் எச்சமயத்திலும் பிறர் எவரிடத்திலாவது குற்றங்குறையைக்கண்டு புன்சிறிப்புக்கொள்ளினும், அப்புன்சிறிப்பால் அஜ்ஜீவனை யலக்ஷியமு மவமதிப்புஞ் செய்தவராகார். ஏனெனில், தன்னந்தரங்கத்துணின்றும் அம்மானிடன் றனது குற்றங்களைக்களைந்து மேற்செல்லும் வண்ணமவனுக் குறுதியை யளித்துக்கொண்டே, அவன்மீதச் சிறுநகையுங் காட்டுவராதலின் என்க.

இனி மற்றவரது அபிப்பிராயங்களையும் அவரது ஆசாரங்களையு மிவ்விதமே குறைவாய்ப்பேசும் பழக்கத்தையும் நீவிர் தவிர்த்தல்வேண்டும். இவற்றுள்ளும் முக்கியமாய் அன்னிய சமயங்களின் கொள்கையைச் சிறிது மிகழாதிருத்தலே வேண்டும். ஏனெனில், எச்சாதியாரிடத்திலாவது அவரது பழக்கங்களிலோ, அல்லது சமயாசாரக் கொள்கைகளிலோ காணப்படும் எவ்வித உயர்வு அல்லது அழகும் நுங்கள் குருநாதனும் பெருமானிடத்தில் விளங்குவதுவேயாகும்.* ஆதலின் குருதேவனது சின்னங்கள் எங்கு காணப்பெறினும் அங்கெல்லாமவன் பிரத்தியக்ஷமாய் நிற்பதாகவே நினைந்து, அவற்றை கவுரவப்படுத்திக் கொண்டாடுதல் நுங்கடமையாகுமன்றோ! ஆனால் எல்லாவிடங்களிலும் சிறந்த நடைகளும் பழக்கங்களுமே யுண்டென யான் கூறவந்தேனில்லை. பின்னை அநேகமிடங்களில் மிகக்கொடிய பழக்கங்களும், பொய் நிறைந்த கருத்துக்களுங் காணப்படுமாயினும், அவற்றைத் தரிசிக்கும்பொழுதெல்லாம் குருதேவனுக்குச் சீடனாயமைந்தவர்கள் செய்யவேண்டியது யாதெனில், அவற்றைக் கண்டித்துத் தூஷியாமல் உள்ளத்தில் வியசனமு மிரக்கமுங்கொண்டே நடித்து வரலேயென்க. ஆதலின் நீங்கள் எக்காலமும் சகல ஜனங்களிடத்திலும் அவ்வவரிடத்தில் விளங்கும் நற்குணங்களைச் சிறப்பித்துப் போற்றியே யவையவை முன்னினுமதிசமாய் உறுதியடையும்படி செய்துவரலே வேண்டுமென்க.

ஆகவே எங்கும் எவரிடத்தும் நீவிர் ஆங்காங்குயர்ந்ததோர் குணத்தையே யுற்றுநோக்கி வரல்வேண்டும்; ஏனெனில் எவ்விடத்திலாவது உயர்வல்லது மேன்மையைக் காண்பீராகில் அங்கு நீவிர் குருதேவனையே யொருவாறு தரிசிப்பவரேயாவீர். இனி வருநாட்களில் நீங்கள் யாவரும் அதிகமாய்ச் சஞ்சாரம் செய்ய நேரிடும். ஜகத்குருவாம் பெருமானது செய்திகளைத் தாங்கி இவ்வுலகில்ப் பலவிடங்களிலும் நீங்கள் சஞ்சரித்துச் சென்றுவரும்படி நேருவது திண்ணம். அப்பொழுது பல்வித

---

* என்னதியானென்பதற, வெவ்விடமுமென்னுசான்
சன்னிதியாக்கண்டுநிட்டை சாதிப்பதெந்நாளோ? தாயுமானவர்.

நடையுடைபாவனைகள் நோக்கங்களை யுடையாராகும் மானிடர்களை நீவிர் காணவேண்டி வருமன்றோ! இந்நோக்கங்களிலநேகம், விசித்திரமானவைகளாயும் வெறுப்பைத் தரத்தக்கவையாகவும் வாய்க்குமென்பதற் கையமில்லை. அச்சமயங்களிலெல்லாம் உங்களுக்குண்டாகும் வெளியுணர்ச்சிகளா லுங்களதந்தரங்க நிலையும் மாறிவரும்படி விடல் தகாது. பின்னை எவை எதிர்ப்படினு மவற்றையெல்லா மாழ்ந்து நோக்கி, யாங்காங்கு கடுகளவாயினும் அழகுமதிசயமும் பொருந்திய அம்சங்கள் உளவோ என்பதைத் தெளிந்தறிந்துகொள்ளலும், அவ்விதங் காணப்படு முயர்வுகளை யெல்லாம் உடனே யங்கீகரித் தேற்றுக்கொள்ளலும் வேண்டும். இனியந்நாளில் இவ்விதமேற்பட வேண்டுமாயின் அதற்கவசியமாய் நுங்களிடம், அன்புகொண்ட வசனங்களையே பேசிவரும் பழக்கமுமிப்பொழுதே மேற்பட்டுவரவேண்டுமென்பதே யெனது கருத்து. இதுவே 'அன்புநிறை வசனங்கள்' எனுமுதற்பாகத்தின் தாத்பரியமாகும்.

இனியித் தைரியமெனுங் குணத்தின்கண்ணுள்ள 'அழகு' எனுமிரண்டா மம்சத்தை விளக்குவாம். அதாவது அழகு அல்லது உசிதம் விளங்கிய வசனங்களையே நீவிர் கூறிவரல் வேண்டுமென்க. இவ்விஷயத்தில் இங்கிலாந்து தேசத்திய சிறுவர்களைக் காட்டிலும் நீங்களே சிரேஷ்டமானவர்கள் ஆகிறீர்கள். ஏனெனில் உங்களுக்கு விசேட சௌகரியமிருக்கின்றது. எவ்விதமெனில், ஆங்கில பாஷையைப்போல நம்மிந்திய நாட்டின் பாஷைகள் அத்தனையாபாஸம் அல்லது அனுசிதத்தன்மை விளங்குபவைகள் அல்ல. இவ்வாங்கிலத்திலும் இலக்கணத்தின் மணம்பெறாது சாமானிய ஜனங்களின் பழக்கத்தில் நடமாடும் பேச்சுக்களே மிகவுங் கொச்சையு மருவருப்புமுடையனவாய் விளங்குகின்றன. அழகு அல்லது உசிதமுள்ள வார்த்தையாவது ஆபாஸமல்லது விகாரத்தன்மை யற்றதுவாகும். விகாரத்தன்மை அல்லதுசிதமின்மையாவது தான் யாதோவெனின், அஃதின்னதென யான் விளக்குவதற்கு ஓரேயோர் வழிதானுள்ளது. அஃதியாதெனில், அழகுசிதமென்பவை யாவற்றிற்குங் குருநாதனுறைவிட மாதலின், அவரிடம் எது கிடையாதோ அதுவே அனுசிதமாமென்க.

ஆதலின் அவரிடம் விளங்காத் துர்க்குணம் நிறைந்த வசனங்களே அனுசிதங்கள் அல்லது ஆபாஸமான வசனங்கள் எனக் கொள்ளலாகும். உதாகரணமாய், குருதேவன் தன்னிடம் துவேஷஞ் சிறிதுமமையப் பெருதவரன்றே! ஆனதுபற்றி அத்துர்க்குணத்தை வெளிப்படுத்துஞ் சொற்களைச் சிறிதும் நாமுபயோகப்படுத்தல் கூடாது. துவேஷமெனும் பதத்தையே எவ்வாற்ருனு நாமுபயோகித்தல் நியாயமன்று. இஃது இங்ஙனமாக, இங்கிலாந்து தேயத்தில் துவேஷத்தன்மையின் கொடுமையையுள்ளபடி யுணராமலே சாதாரணமான சமயத்திலுங்கூட, தான் சம்மதியாததோர் விஷயத்தைக் குறிப்பிட்டுப் பேசத்துடங்கிய எவனும் இத்துவேஷத்தையுணர்த்தும் பதங்களை யுபயோகிப்பது வழக்கமாய் ஏற்பட்டிருக்கிறது. உதாகரணமாய், ஒருவன் 'எனக்கும் அதிகாலையில் துயிலைவிட்டு எழுதற்கும் பெரும்பகை நேர்ந்திருக்கின்றது' என்பான். இஃது எவ்வளவு ஆபாஸகரமான பேச்சு! பாருங்கள். இத்தன்மையதான வசனங்களை நீங்கள் எத்தருணத்திலு முபயோகித்தல் கூடவேகூடாது. நுங்களுக்கு அந்தரங்கத்தில் எதையேனு நோக்கி யருவருப்புண்டாகுமாகில் அததற்குத்தக்க வசனங்களையே தெரிந்தெடுத் துபயோகஞ் செய்தல்வேண்டும். இவ்விதமே யோர் சிறுவன் மற்ருெருவனை நோக்கி, 'நீ முழுமூடன்' என மொழிவன். குருதேவன் இம்மாதிரி வசனங்களை யொருக்காலும் பேசார். ஆதலின், கோபங் குரோதம் குரூரமுதலிய துர்க்குணங்களை விளக்கும் மொழிகளில் எதையும் நீங்கள் கூறுதல் நியாயமாகாது. குருநாதனியற்கையில் நிலைபெருத எக்குணங்களையாவது குறிக்கும் வசனங்கள் உங்கள் உபயோகத்திற்கேற்ற அகராதியிலே தங்கும்படிக் கூடவிடலாகாது. இத்தகைய நியாயங்களால் உசிதமற்ற வசனமாவது குருதேவனிடமில்லாத துர்க்குணமெதையாவது வெளிக்காட்டும் பதமேயாகுமென்பது பெறப்பட்டது.

176031

(இன்னும் வரும்.)

600 008

விளம்பரம்.

நமது சஞ்சிகையின் நேயர்களான சகல அபிமானிகளுக்கும் யாமறையும் விண்ணப்பமாவது:—

சென்ற விரண்டுமூன்று மாதங்களாய் இச்சஞ்சிகை வெளிவராமற் றடைபட்டிருப்பதற்கு காரணமாவது: மாதந்தோரு மிப்பத்திரிகையை யச்சிடுவதற்கு யாங்கள் பலவூர்களிலுமலைந்து அநேகம் அச்சாபீசுகளை நம்பிக் கொடுத்தும் அவற்றைச் சேர்ந்தவர்களால் பல விடுக்கண்களையே யடைந்தோம். இவ்வல்லலைத் தீர்த்துக்கொள்ளும்படி முடிவாய் புதிதான அச்சியந்திரத்தையே இங்கு திருமீயச்சூரில் ஸ்தாபனம் செய்தே தீருவதென்னும் நோக்கங்கொண்டு அதற்கான வதிகாரத்தை இச்சில்லாவின் கலைக்டர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, சென்னைமாநகருக்குச் சென்று அவ்விடத்தில் அச்சாபீசுக்கு வேண்டிய யந்திரமுதலிய சாமான்களை கிரயமீந்துபெற்று, அவற்றையெல்லா மிவ்வூர் சேர்ப்பித்துக்கொள்ளற் கிவ்வளவு காலஞ் சென்றுவிட்டது. இதுவே சஞ்சிகையின் தாமதத்திற்குக் காரணமாய் நேர்ந்ததெனவறிக.

இப்பொழுது அச்சாபீசு ஒன்றே இங்கு எற்பட்டுவிட்டதாதலின், இனி எவ்வகை யிடைஞ்சலுமில்லாது நம்பத்திரிகை சுலபமாய் மாதந்தோறும் வெளிவந்துலாவு மென்பதில் சிறிதும் ஐயமில்லை. நமது நேயர்களியாவரும் இச்செய்தியைக் கேள்வியுற்றுக் கவலை நீங்கி மிகக் களிப்படைவர்களென நம்புகிறோம். அன்றியும், நமது சஞ்சிகையின் முதலாமாண்டு முடிவடைந்ததாதலின், அடுத்த விரண்டாமாண்டின் ஆரம்பமாகிய வித்தருணத்தில் விசேட பிரயத்தினத்துடன் நூதனவலங்காரமாதிகள் பூண்டு நமது சிறுமி வெளிவந்திருக்கிறாளென்பதை தங்களுக்குத் தெரிவிக்கச் சந்தோஷமடைகிறோம். இப்பொழுது வெளிவந்துகொண்டிருக்கும் நூலின் ஆசிரியரான ஸ்ரீமான் ஜினராஜதாஸரவர்களின் படமொன்று சஞ்சிகை மூலமாய் பிரதி சந்தாதாரருக்கும் இத்துடன் அனுப்புகிறோம்.

இனி நமது பத்திரிகையின் நேயர்களியாவரும் இதன் மூலகாரணமாகிய தர்மக்கல்வியாம் நற்றொண்டை முன்னிலுமதிகமாய் ஆதரிக்கத் துணிந்து, இன்னும் நூதனமாய் நமது பத்திரிகைக்குச் சந்தாதாரர்கள் சேரும்வண்ணம் தம்மாலியன்றவளவு உதவிபுரிவார்களென்று நம்புகிறோம்.

இங்ஙனம்

அ. இரத்தினசபாபதி முதலியார்,

சாந்தியாஸ்ரமம், திருமீயச்சூர்,

பேரளம் போஸ்ட், தஞ்சாவூர் ஜில்லா.

சாந்தி வசனம்.

இத்தொடரில், பிர்ம்மக்ஞான சங்கத்தாரால் வெளியிடப்பட்டுவரும் Adyar Pamplets, Adyar Popular Lectures முதலிய சிறு இங்கிலீஷ் புஸ்தகங்களை, இங்கிலீஷ் பயிற்சியில்லாத தமிழ் மெம்பர்களும் அபிமானிகளும் படித்துத் தெரிந்து கொள்ளும்பொருட்டு தமிழில் மொழிபெயர்த்து, மாதமொரு புஸ்தகமாக வெளியிட உத்தேசித்திருக்கிறோம்.

முன்பணம் செலுத்தும் சந்தாதாரர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபால் சார்ஜுள்பட ரூபா 1—8—0.

தனிப்புஸ்தகம் விலை 0—2—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

தேவையுள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்

அ. இரத்தினசபாபதி முதலியார்,

சாந்தியாஸ்ரமம், திருமீயச்சூர்,

பேரளம் போஸ்ட், தஞ்சாவூர் ஜில்லா.